இந்திய அரசின்

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம்

அறிவிக்கை (தமிழாக்கம்)

புதுதில்லி, 18 ஜனவரி, 2019

G.S.R. 37(E):– மத்திய அரசின் முந்தைய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகத்தின் 06.01.2011ஆம் நாளிட்ட S.O.19(E)ஆம் அறிவிக்கையில் (இதன் பின்னர் 2011ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை என குறிப்பிடப்படும்) மத்திய அரசு, 1986ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் (29/1986) 3ஆம் பிரிவின் கீழ், குறிப்பிட்ட சில கடலோர பகுதிகளை கடலோர ஒழுங்குமுறை மண்டலமாக அறிவித்துள்ளதாலும்;

மற்றும், கடல்சார் மற்றும் கடலோர சுற்றுச்சூழலமைப்பு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு, கடலோர பகுதிகள் மேம்பாடு, சூழலியல் சுற்றுலா, வாழ்வாதார விருப்புரிமைகள் மற்றும் கடலோர பகுதிகளைச் சார்ந்திருக்கும் சமூகத்தினரின் நீடித்த நிலையான வளர்ச்சி முதலியவை தொடர்பாக 2011ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையிலுள்ள குறிப்பிட்ட விதித்துறைகள் தொடர்பாக, ஏனைய தொடர்புடைய பொறுப்பாளர்களிடமிருந்தும் பல்வேறு கடலோர மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்தும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்திற்கு பல்வேறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதாலும்.;

மற்றும், பல்வேறு மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை நிருவகிப்பவர்களும் பொறுப்பாளர்களும் 2011ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை குறித்த நேர்வில், கடலோர சுற்றுச்சூழல் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சி தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுமாறு சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்திடம் கோரியுள்ளதாலும்;

மற்றும், 2011ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை குறித்து கடலோர மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் பல்வேறு பொறுப்பாளர்களின் பல்வேறு பிரச்சனைகளையும் விவகாரங்களையும் ஆய்வு செய்து மேற்சொன்ன அறிவிக்கையில் உரிய மாற்றங்களை பரிந்துரைப்பதற்காக சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் டாக்டர். ஷைலேஷ் நாயக் அவர்களின் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளதாலும்;

Verified RealEstate ™

மற்றும், டாக்டர். ஷைலேஷ் நாயக் குழு அளித்த அறிக்கையை அமைச்சகம் ஆராய்ந்து பல்வேறு பொறுப்பாளர்களுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளதாலும்;

மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரிடமிருந்தும் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதற்கு 18.04.2018ஆம் நாளன்று சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தின் வலைதளத்தில் 2018ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல வரைவு அறிவிக்கை வெளியிடப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டதாலும்;

மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2018ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல வரைவு அறிவிக்கை தொடர்பாக வரப்பெற்ற மறுப்புரைகளும் கருத்துக்களும் மத்திய அரசால் உரியவாறு பரிசீலிக்கப்பட்டுள்ளதாலும்;

எனவே, தற்போது, 1986ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் (29/1986) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு மற்றும் (2) உட்பிரிவின் பகுதி (V)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 06.01.2011ஆம் நாளிட்ட 2011ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை S.O. 19(E)–க்கு பதிலிட்டகற்றீடாகவும், அத்தகைய பதிலிட்டகற்றீட்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டவை அல்லது மேற்கொள்ளப்படாமல் விட்டுவிடப்பட்டவை நீங்கலாக, மத்திய அரசு, கடலோர பகுதிகளிலுள்ள மீனவ சமூகம் மற்றும் ஏனைய உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதுடன் கடலோர பகுதிகள் மற்றும் கடல் சார்ந்த பகுதிகளின் தனித்துவமிக்க சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்திலும் இயற்கை பேரிடர்களின் ஆபத்துகளையும் புவி வெப்பமடைதலினால் அதிகரிக்கும் கடல்மட்ட அளவையும் கருத்திற்கொண்டு அறிவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் நிலையான நீடித்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்திலும், அந்தமான் மற்றும் நிகோபார் மற்றும் இலட்சத் தீவுகள் மற்றும் இத்தீவுகளைச் சூழ்ந்துள்ள கடல்சார் பகுதிகள் நீங்கலாக நாட்டின் கடலோர பகுதிகளையும் அதன் நிலத்தின் நீர் வரம்பு வரையிலான நீர்ப்பகுதியையும் பின்வருமாறு கடலோர ஒழுங்குமுறை மண்டலமாக இதனால் அறிவிக்கிறது. அவையாவன:–

(i) கடலின் முன்புறமாக நிலம் நோக்கிய திசையில் உயரலைக் கோட்டிலிருந்து 500 மீட்டர் வரையிலான நிலப்பகுதி

விளக்கம்.– இந்த அறிவிக்கையின் நோக்கங்களுக்காக, உயரலைக் கோடு என்பது, வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கிணங்க தேசிய கடலோர நிலைத் திட்ட மேலாண்மை மையத்தால் வரையறுக்கப்பட்டவாறு, வசந்த கால அலையின்போது மிக உயரமான நீர்க்கோடானது நிலத்தின் எந்த கோடுவரை சென்றடைகிறதோ அந்தக் கோடு என பொருள்படும். இது குறித்து பல்வேறு கடலோர மாநிலங்களுக்கும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Verified RealEstate™

(ii) கடலுடன் இணைந்துள்ள கடலலைகளின் தாக்கத்திற்குள்ளாகிற நீர்நிலைகள் நெடுக நிலம் நோக்கிய பகுதியின் மீதமைந்த, உயரலைக்கோட்டிலிருந்து 50மீ வரையிலுமுள்ள பகுதி அல்லது கடற்கழியின் அகலம் இவற்றில் எது குறைவானதோ அப்பகுதிக்கு இடைப்பட்ட நிலப்பகுதிக்கு கடலோர ஒழுங்குமுறை மண்டல வரையரை பொருந்தும் அத்தகைய கடலலை தாக்கத்திற்குள்ளாகிற நீர்நிலைகள் நெடுக உள்ள பகுதியில், மேம்பாட்டு பணிகள் நடைபெறுவதற்கு முறைப்படுத்தப்பட வேண்டிய தொலைவானது, கடலலைகளின் தாக்கம் உணரப்படுகிற அளவு வரையிலான தொலைவின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். ஆண்டின் மிக வறண்ட காலத்தின்போது அளவிடப்பட்ட 5ppt அளவிலான உவர்தன்மை / உப்புத்தன்மை அடர்த்தியுடைய கடல்நீர் அடிப்படையில் அத்தகைய கடலலைகளின் தாக்கம் கண்டறியப்படும். மேலும், கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கிணங்க கடலலைகளின் தாக்கம் உணரப்படுகிற தொலைவினை தெளிவாக கண்டறிந்து வரையறுக்க வேண்டும்.

இருப்பினும், உரிய ஆலோசனை செயல்முறை, பொது மக்களிடமிருந்து கருத்துகேட்பு முதலியவற்றைக் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்ட அறிவிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்புகளுக்கிணங்க அந்தந்த கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தின் திருத்தத்திற்கும் இறுதி ஒப்புதலுக்குட்பட்டும் 50 மீட்டர் வரம்பு அல்லது கடற்கழியின் அகலம் இவற்றுள் எது குறைவோ அந்த அளவில் கடலோர ஒழுங்குமுறை மண்டல எல்லை அமைந்திருக்கும். இந்த அறிவிக்கைக்கான கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்படும் வரையில், 100 மீட்டர் அல்லது கடற்கழியின் அகலம் இவற்றில் எது குறைவோ அந்த அளவிலான எல்லை தொடர்ந்து பொருந்தும்.

விளக்கம்.– இந்த துணை பத்தியின் நோக்கங்களுக்காக "அலைகளின் தாக்கத்திற்குள்ளாகிற நீர்நிலைகள்" என்பது கடலுடன் இணைக்கப்பட்ட விரிகுடாக்கள், கழிமுகங்கள், ஆறுகள், கடற்கழிகள், கடற்கரைக் காயல்கள் மற்றும் சிறு குளங்களில் கடலிலிருந்து தோன்றும் அலைகளின் தாக்கத்திற்குள்ளாகிற நீர்நிலைகள் என பொருள்படும்.

(iii) "அலையிடை மண்டலம்" என்பது உயரலைக்கோட்டிற்கும் தாழ்வலைக்கோட்டிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதி என பொருள்படும்,

(iv) கடல் குறித்த நேர்வில் தாழ்வலைக்கோட்டிற்கும் நிலப்பகுதியின் நீர் எல்லைக்கும் (12Nm) இடைப்பட்ட நீர் மற்றும் படுகைப் பகுதி மற்றும் அலைகளின் தாக்குதலுக்குட்பட்ட நீர் நிலைகள் குறித்த நேர்வில், கரையிலுள்ள தாழ்வலைக்கோட்டிற்கும் மற்றும் கரையின் எதிர் திசையிலுள்ள தாழ்வலைக்கோட்டிற்கு இடையேயான நீர் மற்றும் நீர்ப்படுகைப் பகுதி.

VerifiedRealEstate™

**2.0 கடலோர ஒழுங்குமுறை மண்டல வகைப்பாடு.–** கடலோர பகுதிகளையும் கடல்சார் நீரையும் பாதுகாக்கும் நோக்கத்திற்காக, கடலோர ஒழுங்குமுறை மண்டலங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும். அவையாவன:–

**2.1 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I இப்பகுதிகள்** சுற்றுச்சூழல் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாகும். இவை பின்வருமாறு மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன, அவையாவன:–

**2.1.1 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I A:**

(a) கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I A பின்வரும் சுற்றுச்சூழல் கூருணர்வு பகுதிகளையும் கடலோர சீர்மையைப் பேணுவதில் முக்கிய பங்காற்றும் புவி புற அமைப்பியல் அம்சங்களையும் உள்ளடக்கியதாகும்: அதவாவது/:

(i) அலையாற்றிக்காடுகள் (அலையாற்றிக்காடுகளின் பரப்பளவு 1000சதுர மீட்டருக்கும் மேற்பட்ட நேர்வில், அலையாற்றிக்காடுகள் நெடுகிலும் 50 மீட்டர் காப்புப்பகுதி ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தகைய பகுதி கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I A:–ஆக அமையும்).
(ii) பவளங்கள் மற்றும் பவளப்பாறைகள்
(iii) மணல்மேடுகள் / மணற்குன்றுகள் / மணல் திட்டுக்கள்;
(iv) உயிரியல் அடிப்படையில் பயன்பாட்டிலுள்ள சமதள சேற்று நிலப்பகுதிகள்.
(v) 1972ஆம் ஆண்டு வனஉயிரின (பாதுகாப்பு) சட்டம் (53/1972), 1980ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டம் (69/1980) அல்லது சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் (29/1986) விதித்துறைகளின் கீழ் தேசிய பூங்காக்கள், கடல்சார் பூங்காக்கள், சரணாலயங்கள், காப்பு வனங்கள், வனவிலங்கு வாழ்விடங்கள் மற்றும் ஏனைய பாதுகாக்கப்பட்ட பகுதிகள். (உயிர்க்கோள காப்பகங்கள் உட்பட)
(vi) உவர் சதுப்புநிலங்கள்
(vii) கடல் ஆமைகளின் உறைவிடங்கள்
(viii) குதிரைலாட நண்டுகளின் உறைவிடங்கள்
(ix) கடற்புல் படுக்கைகள்
(x) பறவைகளின் கூடு அமைவிலான உறைவிடங்கள்
(xi) தொல்லியல் முக்கியத்துவமிக்க பாரம்பரிய தொடர்புடைய பகுதிகள் அல்லது கட்டமைப்புகள்

(b) இந்த அறிவிக்கையின் பிற்சேர்க்கை–I–இல் இடம்பெற்றுள்ளவாறான வழிகாட்டி குறிப்புகளின் அடிப்படையில் சென்னையிலுள்ள தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்தால் கண்டறியப்பட்டவாறு அந்தந்த பகுதிகளிலுள்ள அத்தகைய சுற்றுச்சூழல் கூருணர்வு பகுதிகளுக்கு மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளால்,



Verified RealEstate™

விரிவான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் வகுக்கப்பட்டு கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

### 2.1.2. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I B

அலையிடை மண்டலம் அதாவது தாழ்வலைக்கோடு மற்றும் உயரலைக்கோட்டிற்கு இடையிலான பகுதி கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I ஆக அமையும்.

### 2.2. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–II

மொத்த மனைகளுள் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட விகிதத்தில் பெருமளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் வடிகால் வசதி மற்றும் அணுகு சாலைகள் மற்றும் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் முறை முதலியவை போன்ற ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ள, தற்போதுள்ள நகராட்சி எல்லைகளுக்குள் அல்லது தற்போதுள்ள சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏனைய நகர்ப்புற பகுதிகளில் கரையோரம் வரையிலும் அல்லது அதனருகில் வரையிலும் உள்ள மேம்படுத்தப்பட்ட நிலப்பகுதிகள் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–II என அமையும்.

### 2.3 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III:

ஒப்பீட்டளவில் தன்மைமாறா நிலப்பகுதிகள் (அதாவது ஊரகப் பகுதிகள் முதலியவை) மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–II–இன் கீழ் வராத நிலப்பகுதிகள் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III–என அமையும் மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III பின்வரும் வகையினங்களாக மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது:–

### 2.3.1. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III A:

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையின்படி ஒரு சதுர கிலோமீட்டருக்கு 2161–க்கும் அதிகமான மக்கள் தொகை அடர்த்தியுள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III பகுதிகள் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III A ஆக வகைப்படுத்தப்படும். மேலும், கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III A–இல், உயரலைக்கோட்டிலிருந்து 50 மீட்டர் வரையிலான நிலம் நோக்கிய திசையிலான பகுதி "கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதியாகக்' குறிக்கப்பெறும். ஆனால், உரிய ஆலோசனை நடைமுறையுடன் கட்டமைக்கப்பட்ட, இந்த அறிவிக்கையின்படியுள்ள கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தவறும் நேர்வில், 200 மீட்டர் வரையிலுமான பகுதியில் வரையறுக்கப்பட்டவாறு 'கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதி 'தொடர்ந்து பின்பற்றப்படும்

Verified RealEstate ™

**2.3.2 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III B**

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையின்படி ஒரு சதுர கிலோமீட்டருக்கு 2161–க்கும் குறைவான மக்கள் தொகை அடர்த்தியுடைய ஏனைய அனைத்து கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III பகுதிகளும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III B–ஆக வரையறுக்கப்படும். மேலும், கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III B–இல், நிலம் நோக்கிய திசையிலுள்ள உயரலைக்கோட்டிலிருந்து 200 மீட்டர் வரையிலான பகுதி 'கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதி' என குறிக்கப்படும்.

2.3.3.

கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III–இல் அலைகளின் தாக்கத்திற்குள்ளாகிற நீர்நிலைகள் நெடுகிலும், உயரலைக்கோட்டிலிருந்து 50 மீட்டர் வரையிலான நிலப்பகுதி அல்லது கடற்கழியின் அகலம் இவற்றுள் எது குறைவான தொலைவிலுள்ளதோ அந்த பகுதி கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III–இல் 'கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதியாகக்' குறிக்கப்படும்.

குறிப்பு: அறிவிக்கையிடப்பட்ட துறைமுக எல்லைகளுக்குள் வரும் பகுதிகளில் 'கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதி' பொருந்தாது

**2.4 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IV:**

கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IV நீர்ப்பகுதியைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் அது பின்வருமாறு மேலும் வகைப்படுத்தப்பட வேண்டும்:–

**2.4.1 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IVA:**

கடல்நோக்கிய திசையில் பன்னிரெண்டு கடல் மைல்கள் வரையில் தாழ்வலைக்கோட்டிற்கும் இடைப்பட்ட நீர்ப்பகுதி மற்றும் கடற்படுகைப் பகுதி.

2.4.2 **கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IVB:**

கடலிலுள்ள நீர் அமைப்பின் தொடக்கத்திலிருந்து அலைகளின் தாக்கம் வரை அதாவது ஆண்டின் மிக வறண்ட காலத்தின்போது ஒரு ஆயிரத்திற்கு ஐந்து பகுதிகள் உப்புத்திறன் வரையில் விரிவடையும், கடல் அலை தாக்கம் நிறைந்த நீர்நிலையின் கரையிலுள்ள தாழ்வலைக்கோடு மற்றும் கரையின் எதிர் திசையிலுள்ள தாழ்வலைக்கோட்டிற்கு இடையே அமையும் நீர்ப்பகுதி மற்றும் படுகைப் பகுதிகள் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IVB:–இல் அடங்கும்.

**3.0 கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் சிறப்பு கவனம் தேவைப்படும் பகுதிகள்:–** இடர் நிறைந்த கடற்கரை சுற்றுச்சூழலைப் பாதுக்காப்பதற்கும்

Verified RealEstate™

உள்ளூர் மக்கள் சந்திக்கும் இடர்பாடுகளைக் களைவதற்கும் பின்வரும் கடலோர பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்:–

**3.1 மிகை பாதிப்புக்குள்ளாகக்கூடிய கடலோர பகுதிகள்**

மேற்கு வங்காளத்தின் சுந்தர்பன் பகுதி மற்றும் 1986ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் கண்டறியப்பட்ட குஜராத்திலுள்ள கம்பத் வளைகுடா மற்றும் கட்ச் வளைகுடா, மகாராஷ்டிராவிலுள்ள மால்வன், அச்ரா–ரத்னகிரி, கருநாடகத்திலுள்ள கார்வார் மற்றும் கூண்டபூர், கேரளாவிலுள்ள வெம்பநாடு, தமிழ்நாட்டிலுள்ள மன்னார் வளைகுடா, ஒடிசாவிலுள்ள பைதர்கனிகா, ஆந்திர பிரதேசத்திலுள்ள கொரிங்கா, கிழக்கு கோதாவரி மற்றும் கிருஷ்ணா போன்ற ஏனைய சுற்றுச்சூழல் கூருணர்வு பகுதிகள் மிகை பாதிப்புக்குள்ளாகக்கூடிய கடலோர பகுதிகளாகக் கருதப்பட்டு தங்களின் நிலையான நீடித்த வாழ்வாதாரத்திற்காக கடலோர வளங்களைச் சார்ந்திருக்கும் மீனவர்கள் உள்ளிட்ட கடலோர சமூகத்தினரின் பங்களிப்புடன் நிருவகிக்கப்படும்.

3.2. உள்நாட்டு கழிமுகத் தீவுகள் மற்றும் முக்கிய கடலோர பகுதியிலுள்ள தீவுகளில் அமையும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்

3.3. பெருநகர மும்பையின் நகராட்சி எல்லைகளுக்குள் அமைந்த கடலோர ஒழுங்குமுறை மண்டலம்.

**4. கடலோர ஒழுங்குமுறை மண்டலத்திற்குள் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள்:–** பின்வரும் நடவடிக்கைகள், பொதுவாக, மொத்த கடலோர ஒழுங்குமுறை மண்டலத்திற்குள் தடைசெய்யப்பட வேண்டும். இவை நீங்கலானவை மற்றும் ஏனைய அனுமதிக்கப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள், குறிப்பிட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல வகைப்பாடுகளின் அதாவது கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I, II, III மற்றும் IV பத்தி 5–இல் உள்ள விதித்துறைகளின்படி நிருவகிக்கப்பட வேண்டும்.

(i) புதிய தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள், செயல்பாடுகள் அல்லது நடைமுறைகளை விரிவாக்குதல்.

(ii) 04.04.2016 ஆம் நாளிட்ட சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஜி.எஸ்.ஆர்.395 (E)ஆம் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, எண்ணெய் உற்பத்தி அல்லது கையாளுதல், அபாயகரமான பொருட்களை சேமித்தல் அல்லது அகற்றுதல்.

(iii) புதிய மீன் பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல்.

(iv) இந்த அறிவிக்கையின் கீழ் அனுமதிக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியின் முன் அனுமதியுடன்



Verified RealEstate TM

செயல்படுத்தப்படும் நடவடிக்கைகள் நீங்கலாக, நிலத்தை சீரமைத்தல், கடல்நீரின் இயற்கையான நீர்வழி போக்கை கட்டமைத்தல் அல்லது இடையூறு ஏற்படுத்துதல்.

(v) தொழிற்சாலைகள், மாநகரங்கள் அல்லது நகரங்கள் மற்றும் ஏனைய மனித குடியிருப்புகளிலிருந்து சுத்திகரிக்கப்படாத கழிவுகள் மற்றும் கழிவு நீரினை வெளியேற்றுதல்.

(vi) நிலத்தடி நிரப்பும் நோக்கத்திற்காக, கட்டுமான குப்பைகள், தொழிற்சாலை திடக்கழிவுகள், எரி சாம்பல் உள்ளிட்ட மாநகர அல்லது நகர கழிவுகளைக் கொட்டுதல்.

(vii) கடலோரத்தில் அதிக அளவில் மண் அரிப்பு ஏற்படும் பகுதிகளில் துறைமுகத் திட்டங்கள்.

(viii) மணல், பாறைகள் மற்றும் ஏனைய துணை அடுக்கு பொருட்களை தோண்டி எடுத்தல்.

(ix) நிலத்திற்கும் கடலோரத்திற்கும் இடையில் அமைந்திருக்கும் மணல் மேடுகளை/மணல் திட்டுகளை மாற்றியமைத்தல்.

(x) நீர்வாழ் அமைப்பு மற்றும் கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக, கடலோர நீர்ப்பகுதிகளில் நெகிழிப் பொருட்கழிவுகளை கொட்டுவது தடைசெய்யப்பட்டு, நெகிழிப் பொருட்களை மேலாண்மை செய்வதற்கும் அகற்றுவதற்கும் போதுமான நடவடிக்கைகள் கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(xi) நிலத்தடி நீரை அதிக அளவில் உறிஞ்சிப் பயன்படுத்துதல்.

5. கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகளை முறைப்படுத்துதல்:

5.1 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I :

5.1.1. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I A:

இந்தப் பகுதிகள் சூழலியல் ரீதியாக அதிகளவிலான கூருணர்வு தன்மை கொண்டவை மற்றும் பொதுவாக பின்வரும் விதிவிலக்குகளுடன் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I A பகுதியில் யாதொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது:–

i) உரிய ஆலோசனை செயல்முறை, பொது விசாரணை முதலியன மற்றும் கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தில் (CZMP) பட்டியலிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்புகள் மற்றும் சுற்றுசூழல் கூருணர்வு பகுதிகள் தொடர்பான முன்னெச்சரிக்கைகளுக்கு உட்பட்டு, இந்த அறிவிக்கையின்படி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட அத்தகைய சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்குட்பட்டு, அடையாளம்



Verified RealEstate™

காணப்பட்ட பகுதிகளில் உள்ள சதுப்பு நில நடைகள், மரக் குடில்கள், இயற்கைப் பாதைகள் போன்ற சூழலியல் சுற்றுலா நடவடிக்கைகள்

ii) அலையாத்திக் காடுகளில், பொது மக்களின் பயன்பாடுகளுக்குத் தேவைப்படும் குழாய்கள் பதித்தல், மின் அனுப்புகை கம்பிகள், போக்குவரத்து ஏற்பாட்டு முறைகள் அல்லது செயல் திட்டங்கள் மற்றும் உயர்த்தப்பட்ட வடிவிலான சாலை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

iii) கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் ஒப்புதலளிக்கப்பட்டு, விரிவான கடல் அல்லது நிலப்பரப்பு அல்லது சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டிற்குட்பட்டு, பாதுகாப்பு, உத்திமுறையான நோக்கங்கள் மற்றும் பொதுப்பயன்பாட்டிற்கு என விதிவிலக்கான நேர்வுகளில் மட்டுமே, கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I பகுதிகளில் சீரமைப்பு வாயிலாக சாலைகள் மற்றும் உயர்த்தப்பட்ட வடிவிலான சாலைகள் அமைப்பது போன்ற நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்பட வேண்டும்; கட்டமைக்கப்படும் அத்தகைய சாலைகள் அலையாத்திக் காடுகளின் வழியாகச் செல்லும் நேர்வில், அல்லது சதுப்புநிலங்களை சேதப்படுத்தும் நேர்வில், கட்டுமானப் பணியின் போது பாதிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட அல்லது வெட்டப்பட்ட அலையாத்திக் காடுகளில் உள்ள மரங்களை ஈடுசெய்யும் வகையில் அழிக்கப்பட்ட மரங்களுக்கு இணையான எண்ணிக்கையின் குறைந்தளவு மூன்று மடங்கு மரங்களை நட வேண்டும்.

**5.1.2 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I B– ஓதங்கள் சந்திப்புப் பகுதிகள்:**

கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IB பகுதிகளில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:–

(i) நிலத்தை மீட்டெடுத்தல், கரை கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் பின்வருவனவற்றிற்கு மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும்,– அவையாவன,–

(a) சிறுதுறைமுகங்கள், துறைமுகங்கள், படகுத்துறைகள், கப்பல்துறை மேடைகள், கடற்பகுதிகள், கப்பல் கட்டுமான சாய்தளங்கள், பாலங்கள், கடலோர காவல்படைக்கான மிதவை துறைமுகங்கள், கடல் வழி இணைப்புகள் போன்ற கடற்கரையோர வசதிகள்;

(b) பாதுகாப்பு மற்றும் உத்திமுறை நோக்கங்களுக்கான திட்டப்பணிகள்;

(c) தூண்கள் கொண்டு உயர்த்திக் கட்டப்பட்ட சாலைகள், இருப்பினும், தற்போதுள்ள உயர் ஓதங்கள் ஏற்படும் பகுதிகள் வரையில், அத்தகைய சாலைகளின் நிலப்பரப்பில் வளர்ச்சியை



Verified RealEstate ™

அனுமதிப்பதற்காக அத்தகைய சாலைகளுக்கு அனுமதிக்கப்படக்கூடாது:

இருப்பினும், யாதொரு தொழிற்சாலை செயல்பாடுகள், பழுதுபார்த்தல் அல்லது பராமரித்தல் நீங்கலாக, மின் அல்லது மின்னணு சமிக்ஞை ஏற்பாட்டு முறை, அனுமதிக்கப்பட்ட வடிவங்களில் இடைவழி நிறுத்தம் உட்பட பொதுமக்களுக்கான விரைவுப் போக்குவரத்து அல்லது பல்வேறு வகையிலான போக்குவரத்து ஏற்பாட்டு முறை, அத்தகைய இடைவழி அல்லது போக்குவரத்து அமைப்புமுறைகளை இயக்குவதற்குத் தேவையான அனைத்து கட்டுமானம் மற்றும் நிறுவுகை போன்ற பொதுப் பயன்பாட்டிற்கு மட்டுமே பண்படுத்தப்பட்ட நிலப்பகுதி அனுமதிக்கப்படலாம்.

(ஈ) மண் அரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்;

(உ) கடலோர காவல்படைக்கான நீர்வழிகள், கால்வாய்கள், துறைமுகங்கள் மற்றும் மிதவை துறைமுகங்களை பராமரித்தல் மற்றும் சுத்தம் செய்தல்;

(ஊ) மணல் திட்டுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள், ஓதங்கள் ஒழுங்குபடுத்திகளை நிறுவுதல், வெள்ள நீர் வடிகால்களை அமைத்தல் அல்லது உப்புநீர் உட்புகுவதை தடுத்தல் மற்றும் நன்னீர் மீள்நிரப்புதல் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.

(ii) துறைமுகங்கள், படகுத்துறைகள், கடல்வழிகள், கப்பல் கட்டும் சாய்தளங்கள், அரிப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், அலைதாங்கி சுவர்கள், குழாய் தொடர்கள், கலங்கரை விளக்கங்கள், கடல்வழி பாதுகாப்பு வசதிகள், கடலோரக் காவல் நிலையங்கள், இந்திய கடலோர காவல் நிலையங்கள் மற்றும் அது போன்ற நீர்நிலை தொடர்பான நடவடிக்கைகள் அல்லது நேரடியாகத் தேவைப்படும் கடற்கரையோர வசதிகள்.

(iii) மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் தொடர்புடைய வசதிகளின் வாயிலான ஆற்றல்.

(iv) அபாயகரமான பொருட்களை கப்பல்களிலிருந்து துறைமுகங்கள், முனையங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மாற்றுதல் மற்றும் அவைகளிலிருந்து கப்பலுக்கு மாற்றுதல்.

(v) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் எண்ணெய் தொழிலக பாதுகாப்பு இயக்கத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள் உள்ளிட்ட பாதுகாப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்குட்பட்டு, இந்த அறிவிக்கையின் பிற்சேர்க்கை–II இல் குறிப்பிடப்பட்டுள்ள பெட்ரோலிய உற்பத்தி பொருட்கள் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை பெறுவதற்கும், சேமிப்பதற்கான வசதிகள்; அத்தகைய வசதிகள், உரங்கள் மற்றும் உரங்களுக்குத் தேவைப்படும் அம்மோனியா,



Verified RealEstate™

பாஸ்பரிக் அமிலம், சல்பர், சல்பூரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் முதலியன போன்ற கச்சா பொருட்களை பெறுவதற்கும், சேமிப்பதற்கும் ஆகும்.

(vi) குறிப்பிடப்பட்ட துறைமுகங்களில் சமையல் எண்ணெய், உரங்கள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற அபாயகரமற்ற சரக்குகளை சேமித்தல்

(vii) மீன்குஞ்சுகள் பொரிப்பகம் மற்றும் இயற்கையாக மீன்களை உலர்த்துதல்.

(viii) செயல்பாட்டிலுள்ள மீன் பதப்படுத்தும் அலகுகள் நவீனமயமாக்கல் நோக்கங்களுக்காக, (கூடுதல் உபகரணங்கள் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மட்டும்) 25% கூடுதல் தரைத்தளப்பகுதியை பின்வரும் பொருண்மைகளுக்குட்பட்டு பயன்படுத்தலாம்:

(அ) நடைமுறையிலுள்ள நகர ஊரமைப்புத் திட்டமிடல் விதிமுறைகளின்படி, அனுமதிக்கப்பட்ட தரை தளக் குறியீட்டு அளவிற்கு மிகாமல், அத்தகைய மறு கட்டுமானத்திற்கான தரை தளக் குறியீடு இருக்க வேண்டும்;

(ஆ) **கூடுதல் தரை தளப் பகுதி, நிலப்பகுதிக்கு மட்டுமே கட்டப்படுகிறது.**

(இ) தொடர்புடைய மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசுக் கட்டுப்பாட்டுக் குழுவின் ஒப்புதல்.

(ix) கழிவுகள் மற்றும் கழிவுநீரை சுத்திகரிப்பதற்கான வசதிகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளை கொண்டு செல்லுதல்.

(x) வெள்ள நீர் வடிகால்

(xi) உத்திமுறையானவை, பாதுகாப்பு தொடர்பான திட்டப்பணிகள் என வகைப்படுத்தப்பட்ட திட்டப்பணிகள் மற்றும் இந்திய அரசின் அணுசக்தித் துறையின் திட்டப்பணிகள்.

(xii) மண்டலப் பகுதிகளில் ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்காக அணு கனிம இயக்குநரகத்தால் ஏற்பளிக்கப்பெற்ற சுரங்கத் தொழில் திட்டத்தின்படி, இந்திய அரசின் அணுசக்தித்துறையால் அனுமதிக்கப்பட்டவாறான அத்தகைய முகைமைகளால் ஓத சந்திப்பு மண்டலத்தில் 1957 ஆம் ஆண்டு சுரங்கத்தொழில் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும், முறைப்படுத்தலும்) சட்டத்தின் (67/1957) முதலாவது விவர அட்டவணையின் பகுதி–B இன் கீழ் அறிவிக்கையிடப்பட்டவாறாக அணு கனிமம்/கனிமங்களின் அல்லது ஒன்று அல்லது ஏனைய கனிமங்களுடன் சேர்த்து மனிதர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிற அணு கனிமம்/கனிமங்களின் சுரங்கப் பணிகள்;

இருப்பினும், ஓத சந்திப்பு மண்டலத்திற்குள் தாது அல்லது கனிமத்தை சேகரிப்பதற்காக, கூடைகள் மற்றும் கை மண்வெட்டிகளை பயன்படுத்தி பணிபுரியும் நபர்களை பணியமர்த்துவதன் வாயிலாக மட்டுமே மனிதர்களைக் கொண்டு சுரங்கத் தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சுரங்கத் திட்டத்தின்படி, ஓத சந்திப்பு மண்டலத்தில்



Verified RealEstate™

துளையிடுதல் மற்றும் வெடித்தல் அல்லது கனரக நகரும் இயந்திரங்களை பயன்படுத்தக்கூடாது.

(xiii) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கண்டறியும் ஆய்வு மற்றும் பிரித்தெடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகள் மற்றும் வசதிகள்;

(xiv) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் அறிவிக்கையிடப்பட்ட சுற்றுச்சூழல் தரநிலைகள் மற்றும் நேர்விற்கேற்ப, மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம் அல்லது மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியம் அல்லது மாசுக்கட்டுப்பாடுக் குழுவின் தொடர்புடைய உத்தரவுகளுக்கு இணக்கமாக, மூலப்பொருட்களைக் கொண்டு செல்வதற்கு கடற்கரையோரத்திற்கு தேவைப்படும் வசதிகள், கடல்நீரை குடிநீராக்கும் ஆலைகளுக்கு குளிரூட்டும் நீரை உட்செலுத்துவதற்கான வசதிகள் மற்றும் அனல்மின் நிலையங்களில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை அல்லது குளிரூட்டும் நீரை வெளியேற்றுவதற்கான வடிகால்.

(xv) குழாய் தொடர்கள், மின் கம்பிகள் உள்ளிட்ட போக்குவரத்து ஏற்பாட்டு முறைகள்.

(xvi) புயல் கணிப்பு, கடல் கண்காணிப்பு தளங்கள், இயக்கம் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளை கண்காணிப்பதற்கான வானிலை ரேடார் அமைப்பு.

(xvii) உப்பு உற்பத்தி மற்றும் தொடர்புடைய வசதிகள்.

(xviii) உப்புநீக்கும் ஆலைகள் மற்றும் தொடர்புடைய வசதிகள்.

**5.2. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–II**

(i) கடலோர ஒழுங்குமுறை மண்டலம் I B–இல் அனுமதிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள், கடலோர ஒழுங்குமுறை மண்டலம் –II இல், பொருந்தக்கூடிய அளவிற்கு அனுமதிக்கப்படும்.

(ii) குடியிருப்பு நோக்கங்களுக்காக, பள்ளிகள், மருத்துவமனைகள், நிறுவனங்கள், அலுவலகங்கள், பொது இடங்கள் போன்றவற்றிற்காக கட்டடங்களை கட்டுவது, தற்போதுள்ள சாலையின் நிலப்பகுதியில் அல்லது ஏற்கனவே உள்ள அனுமதிக்கப்பட்ட நிலையான கட்டமைப்புகளின் நிலப்பகுதியில் மட்டுமே அனுமதிக்கப்படும்.

ஆனால், தற்போதுள்ள சாலையின் கடலோர பகுதியில் கட்டப்படும் யாதொரு புதிய சாலைகளின் நிலப் பகுதிகளின் மீது கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(iii) மேலே (ii) இல் உள்ளபடி அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள், அவ்வப்போது பொருந்தக்கூடிய உள்ளூர் மற்றும் நகர ஊரமைப்புத் திட்டமிடல் ஒழுங்குமுறைகள் மற்றும் இந்த அறிவிக்கையின் நாளில் நடைமுறையில் உள்ள தரை தளக் குறியீடு அல்லது தரைப் பகுதி

விகிதத்தின் நெறிமுறைகளின் பொருண்மைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இந்த அறிவிக்கை, அரசிதழில் வெளியிடப்பட்ட நாளுக்குப் பின்னர், தரை தளக் குறியீட்டினை திருத்த வேண்டிய தேவை ஏற்படும் நேர்வில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதி, நேர்விற்கேற்ப, தொடர்புடைய மாநில கடலோர மண்டல மேலாண்மை அதிகார அமைப்பு (SCZMA)அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியின் கடலோர மண்டல மேலாண்மை அமைப்பின் வாயிலாக, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தை அணுக வேண்டும். மாநில கடலோர மண்டல மேலாண்மை அமைப்பு(SCZMA), அக்கருத்துருவை, தேசிய கடலோர மண்டல மேலாண்மை அமைப்பிற்கு (NCZMA)இந்த விவகாரம் தொடர்பான கருத்துக்களுடன் அனுப்பும். பின்னர், தேசிய கடலோர மண்டல மேலாண்மை அமைப்பு(NCZMA), பொதுவான வசதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகள் போன்ற பல்வேறு நுட்பங்களை ஆய்வு செய்து, கருத்துருவின் மீது உரிய முடிவினை எடுக்கும். தொடர்புடைய திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, திடக்கழிவுகள் கையாளுவது, சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், கடற்கரை அல்லது கடலோர நீரில் வெளியேற்றப்படுவதில்லை என்பதை உறுதி செய்வது தொடர்புடைய நகரத் திட்டமிடல் அதிகார அமைப்பின் பொறுப்பாகும்.

iv) தற்போதுள்ள நிலப்பகுதியின் யாதொரு மாற்றமும் செய்யாமல், அவ்வப்போது பொருந்தக்கூடிய உள்ளூர் நகர் ஊரமைப்புத் திட்டமிடல் ஒழுங்குமுறைகள் மற்றும் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வரும் நாளில் செயலில் உள்ள தரை தளக் குறியீடு அல்லது தரைப் பகுதி விகிதத்தின் நெறிமுறைகளின் பொருண்மைக்கேற்ப கட்டடங்கள் மறு கட்டமைப்பு செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். மேற்சொன்ன இந்த அறிவிக்கை, அரசிதழில் வெளியிடப்பட்ட நாளுக்குப் பின்னர், தரை தளக் குறியீட்டினை திருத்த வேண்டிய தேவையுள்ள நேர்வில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதி, நேர்விற்கேற்ப, தொடர்புடைய மாநில கடலோர மண்டல மேலாண்மை அமைப்பு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியின் கடலோர மண்டல மேலாண்மை அமைப்பின் வாயிலாக, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தை அணுக வேண்டும். மாநில கடலோர மண்டல மேலாண்மை அமைப்பு, அக்கருத்துருவை, தேசிய கடலோர மண்டல மேலாண்மை அமைப்பிற்கு இந்த விவகாரம் தொடர்பான கருத்துக்களுடன் அனுப்பும். பின்னர், தேசிய கடலோர மண்டல மேலாண்மை அதிகார அமைப்பு, பொதுவான வசதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகள் போன்ற பல்வேறு நுட்பங்களை ஆய்வு செய்து, கருத்துருவின் மீது உரிய முடிவினை எடுக்கும். தொடர்புடைய திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, திடக்கழிவுகள் கையாளப்படுவது, சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், கடற்கரை அல்லது

Verified RealEstate™

கடலோர நீரில் வெளியேற்றப்படுவதில்லை என்பதை உறுதி செய்வது தொடர்புடைய நகரத் திட்டமிடல் அமைப்பின் பொறுப்பாகும்.

(v) இந்த அறிவிக்கையின் பிற்சேர்க்கை–III இல் உள்ள நிபந்தனைகள் அல்லது வழிகாட்டுதல்களுக்குட்பட்டு, கடற்கரையோர தங்கி மகிழ்விடங்கள் அல்லது உணவகங்கள் கட்டுவதற்கு அல்லது சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகளுக்கு குறிப்பிடப்பட்ட பகுதிகளில் உள்ள காலி மனைகளை மேம்படுத்துதல்;

(vi) குடிசைகள், கழிப்பறைகள் அல்லது கழிவறைகள், உடை மாற்று அறைகள், நீர்த்தூவல் அமைப்புகள்; ஊடுபிணைப்பு நடைபாதை தொகுதிகள் போன்றவற்றைக்கொண்டு அமைக்கப்பட்ட நடைபாதைகள், குடிநீர் வசதிகள், இருக்கை வசதிகள் போன்றவற்றை (உள்ளடக்கிய கடற்கரைகளில் மட்டுமே) தற்காலிக சுற்றுலா வசதிகளுக்கு அனுமதிக்கப்படும். எனினும், முறையான ஆலோசனை செயல்முறை அல்லது பொது மக்களிடமிருந்து கருத்து கேட்டல் முதலியனவற்றை கொண்டும் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்புகளுக்கு உட்பட்டும் வகுக்கப்பட்ட இந்த அறிவிக்கையின்படி ஒப்புதலளிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தில் இடம்பெறும் சுற்றுலாத் திட்டத்திற்குட்பட்டு மட்டுமே அத்தகைய வசதிகளுக்கு அனுமதிக்கப்படும். இருப்பினும் அத்தகைய வசதிகளை அமைப்பதற்கு உயரலைக் கோட்டிலிருந்து குறைந்தளவு 10 மீட்டர் தூரம் பராமரிக்கப்பட வேண்டும்.

**5.3 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III:**

(i) கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I B–இல் அனுமதிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள், கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III–லும், பொருந்தக்கூடிய வகையில் அனுமதிக்கப்படும்.

**(ii) கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதியில் செயல்பாடுகளை முறைப்படுத்துதல்:**

கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதியில் பின்வருபவை அனுமதிக்கப்படும் மற்றும் முறைப்படுத்தப்படும்:–

(a) தற்போதுள்ள தரை இடப்பகுதி, தற்போதுள்ள அடித்தளப் பகுதி மற்றும் ஏற்கனவே உள்ள அடர்த்திக்கு மிகாமல் இருக்கும் அனுமதிக்கப்பட்ட கட்டமைப்பை பழுதுபார்த்தல் அல்லது மறுகட்டுமானம் மற்றும் செயல்பாடுகளுக்கு அவசியமான வசதிகள் உட்பட இந்த அறிவிக்கையின் கீழ் அனுமதிக்கத்தக்க செயல்பாடுகள் மற்றும் தேவைப்படும் பேரிடர் மேலாண்மை வழிவகைகள் மற்றும் முறையான சுகாதார ஏற்பாடுகளுடன் மீனவர்கள் உட்பட பாரம்பரிய கடலோர சமூகங்களின் குடியிருப்பு அலகுகளின் கட்டுமானம் அல்லது மறுகட்டுமானம் நீங்கலாக கடலோர ஒழுங்குமுறை மண்டலம் III –இல்

கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் எந்த கட்டுமானமும் அனுமதிக்கப்படமாட்டாது.

(b) வேளாண், தோட்டக்கலை, தோட்டங்கள், மேய்ச்சல் நிலங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் காடு வளர்ப்பு.

(c) உள்ளூர் மக்களுக்குத் தேவைப்படும் மருந்தகங்கள், பள்ளிகள், பொது மக்களுக்கான மழை காப்பிடம், சமுதாயக் கழிப்பறைகள், பாலங்கள், சாலைகள் ஆகியவற்றின் கட்டுமானம், குடிநீர் வழங்கல், வடிகால், கழிவுநீர், சுடுகாடு, கல்லறைகள் மற்றும் மின்சார துணை மின் நிலையங்களின் வசதிகளுக்கு வகை செய்தல் ஆகியவை நேர்வு அடிப்படையில் கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் (கடலோர மண்டல மேலாண்மை அதிகாரமன்றம்) வாயிலாக அனுமதிக்கப்படலாம்.

(d) சம்பந்தப்பட்ட மாசுக்கட்டுப்பாடு வாரியம் அல்லது குழுவின் முன் அனுமதியுடன் வீட்டு கழிவுநீர், சுத்திகரிப்பு மற்றும் அகற்றலுக்கான அலகுகள் அல்லது அவற்றுக்கான கூடுதல் கட்டுமானம்.

(e) மீன் உலர்த்தும் கூடங்கள், ஏலம் விடும் கூடங்கள், வலை சீர் செய்யும் தளங்கள், பாரம்பரிய படகு கட்டும் தளங்கள், பனிக்கட்டி ஆலை, பனிக்கட்டி உடைக்கும் அலகுகள், மீன் பதனிடும் வசதிகள் போன்ற உள்ளூர் மீனவ சமூகங்களுக்கு தேவையான வசதிகள்.

(f) கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III பகுதிகளின் கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதி வழியாக தேசிய அல்லது மாநில நெடுஞ்சாலை அமைந்துள்ள இடங்களில் சாலையின் கடற்புறத்தில் கழிப்பறைகள், உடை மாற்று அறைகள், குடிநீர் வசதி மற்றும் தற்காலிக குடில்கள் போன்ற தற்காலிக சுற்றுலா வசதிகளுக்கு வகைசெய்யப்படலாம்.

கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதியில் உள்ள அத்தகைய சாலைகளின் நிலப்பரப்பில், ஓய்வு விடுதிகளுக்கு அல்லது உணவகங்கள் மற்றும் தொடர்புடைய சுற்றுலா வசதிகளுக்கு அனுமதிக்கப்படும். இருப்பினும், அத்தகைய வசதிகள், இந்த அறிவிக்கை மற்றும் பிற்சேர்க்கை–III இல் உள்ள நிபந்தனைகள் அல்லது வழிகாட்டுதல்களின்படி ஒப்புதளிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தில் சுற்றுலாத் திட்டத்தை இணைக்கப்படுவதற்கு உட்பட்டு மட்டுமே அனுமதிக்கப்படும்.

(g) கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதி மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III இல் உள்ள கடலோரங்களில் தற்காலிக சுற்றுலா வசதிகளுக்கு அனுமதிக்கப்படும். அத்தகைய தற்காலிக வசதிகளில் குடிசைகள், கழிப்பறைகள் அல்லது கழிவறைகள், உடை மாற்று அறைகள், நீர்த்தூவல் அமைப்புகள் ஊடுபிணைப்பு நடைபாதை தொகுதிகள் பயன்படுத்தி கட்டப்பட்ட நடைபாதைகள் போன்றவை, குடிநீர் வசதிகள், இருக்கை ஏற்பாடுகள் போன்றவை மட்டுமே அடங்கும், இருப்பினும், அத்தகைய வசதிகள், அத்தகைய வசதிகளை அமைப்பதற்காக உயரலைக் கோட்டிலிருந்து குறைந்தளவு 10 மீட்டர் தொலைவிற்கு உட்பட்டு, இந்த அறிவிக்கையின் படி, ஒப்புதளிக்கப்பட்ட



Verified RealEstate ™

கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தில் இடம்பெறும் சுற்றுலாத் திட்டத்திற்கு உட்பட்டு மட்டுமே அனுமதிக்கப்படும்.

(h) ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கான அணு கனிம இயக்ககத்தின் சுரங்கத்தொழில் திட்டத்தின் படி, இந்திய அரசின் அணுசக்தி துறையால் அனுமதிக்கப்பட்டவாறான அத்தகைய முகைமைகளால் 1957 ஆம் ஆண்டு சுரங்கத்தொழில் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (67 / 1957) முதலாவது விவர அட்டவணையின் பகுதி–B இன் கீழ் அறிவிக்கையிடப்பட்ட அணு கனிமங்கள் அல்லது ஒன்று அல்லது ஏனைய கனிமங்களுடன் சேர்ந்த சுரங்கப்பணிகள்.

**(iii) கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதிக்கு அப்பால் உள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III பகுதிகளுக்கான செயல்பாடுகளை முறைப்படுத்துதல்:**

(a) இந்த அறிவிக்கையின் பிற்சேர்க்கை–III இல் உள்ள நிபந்தனைகள் அல்லது வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு கடலோர ஓய்வு விடுதிகள் அல்லது உணவகங்களை கட்டுவதற்கு அல்லது சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகளுக்கு குறிப்பிடப்பட்ட பகுதிகளில் உள்ள காலி மனைகளை மேம்படுத்துதல்.

(b) ஏற்கனவே உள்ள மீன்பிடி கிராமங்கள் முதலியன போன்ற பாரம்பரிய உரிமைகள் மற்றும் வழக்கமான பயன்பாடுகளின் வரம்பிற்குள் உள்ள விவர குடியிருப்பு அலகுகளின் கட்டுமானம் அல்லது மறுகட்டுமானம் மற்றும் மேலும் அத்தகைய கட்டுமானம் அல்லது மறுகட்டுமானத்திற்கான கட்டட அனுமதி, கட்டுமானத்தின் உயரம் 9 மீட்டருக்கு மிகாமலும் இரண்டு தளங்களுடன் (தரை + ஒரு தளம்) கூடிய உள்ளூர் நகரமைப்பு திட்டமிடல் விதிகளுக்குட்பட்டிருக்கும்;

(c) கட்டப்பட்ட பரப்பு தற்போதுள்ள வீடுகளின் கட்டடப்பரப்பு வடிவமைப்பு அல்லது முகப்பை மாற்றாமல் 'வீட்டில் தங்குதல்' வாயிலாக சுற்றுலாவை மேம்படுத்த மீனவர்கள் உட்பட உள்ளூர் சமூகங்களுக்கு அனுமதிக்கலாம்.

(d) மழைக்கால பொது மக்கள் தங்குமிடங்கள், சமுதாயக் கழிப்பறைகள், குடிநீர் வழங்கல், வடிகால், கழிவுநீர், சாலைகள், பாலங்கள், முதலியவற்றின் கட்டுமானம்.

(e) சுண்ணாம்பு சுரங்கத் தொழில்.

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி குழு (CSIR), மத்திய சுரங்க ஆராய்ச்சி நிறுவனம் போன்ற சுரங்கத் துறையில் புகழ்பெற்ற தேசிய நிறுவனங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், உயரலை கோடுகளின் உயரத்திற்குப் போதுமான அளவு அதிகமாக இருக்கும் சுரங்கத் தொழில் திட்டங்களின் கீழ் குறிப்பிட்ட



Verified RealEstate™

அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் சுண்ணாம்புக் கனிமங்களை வெட்டியெடுப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட சுரங்கத் தொழிலுக்கு அனுமதிக்கப்படலாம். ஆனால் உயரலை கோட்டிற்கு மேலே 1 மீட்டருக்குக் குறையாமல் கனிமப் பிரித்தெடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். உப்பு நீர் ஊடுருவலிலிருந்து பாதுகாப்பதற்கும், கடலோர நீர் மாசுபடுதல் மற்றும் கடலோரப் பகுதிகளின் அரிப்பை தடுப்பதற்கும் தொடர்பான உரிய பாதுகாப்புகளுக்குட்பட்டு போதிய அரண் உருவாக்கப்பட வேண்டும்.

(f) ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கான அணு கனிம இயக்ககத்தின் சுரங்கத்தொழில் திட்டத்தின் படி, இந்திய அரசின் அணுசக்தி துறையால் அனுமதிக்கப்பட்டவாறான அத்தகைய முகைமைகளால் 1957 ஆம் ஆண்டு சுரங்கத்தொழில் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (67 / 1957) முதலாவது விவர அட்டவணையின் பகுதி–B இன் கீழ் அறிவிக்கையிடப்பட்ட அணு கனிமங்கள் அல்லது ஒன்று அல்லது ஏனைய கனிமங்களுடன் சேர்ந்த சுரங்கப்பணிகள்.

(iv) உள்ளூர் சமூகங்கள் வசிக்கும் பகுதிகளில் அவர்களின் பயன்பாட்டிற்கு நீங்கலாக, உயரலைக் கோடுகளின் 200 மீட்டருக்குள் நிலத்தடி நீர் எடுத்தல் மற்றும் அது தொடர்பான கட்டுமானம் தடை செய்யப்படும் மற்றும் உயரலை கோட்டின் 200 முதல் 500 மீட்டருக்குள் இடைப்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீரை சாதாரண கிணறுகளில் இருந்து குடிநீர், தோட்டக்கலை, விவசாயம் மற்றும் மீன்வளம் போன்றவற்றுக்கு கைமுறையாக மட்டுமே எடுக்க அனுமதிக்கப்படும். வேறு எந்த நீர் ஆதாரமும் கிடைக்காத இடங்களில், கடல் நீர் உட்புகுவதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாநில அரசு அல்லது மத்திய ஆரசின் நேரடி ஆட்சி பகுதி நிருவாகத்தால் நியமிக்கப்பட்ட ஆணையத்தால் அவ்வாறு நீர் எடுப்பதற்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம், இருப்பினும், தோட்டக்கலை மற்றும் விவசாய நோக்கங்களுக்காக, அரசின் நலத்திட்டங்களால் ஊக்குவிக்கப்படும் நுண்ணீர் பாசனம் அனுமதிக்கப்படும்.

(v) போதுமான சுற்றுச்சூழல் பாதுகாப்புகளுடன் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III இன் பயன்பாடின்றிருக்கும் பகுதிகளில் தரிசு நிலங்கள் மற்றும் விளைநிலங்கள் அல்லாத நிலங்களில் விமான நிலையங்களை கட்டமைத்தல்.

**5.4 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IV:**

கடலோர ஒழுங்குமுறை மண்டலம் IV பகுதிகளில் கீழ்க்கண்டவாறு செயல்பாடுகளுக்கு அனுமதிக்கப்பட்டு முறைபடுத்தப்படும்:

(i) உள்ளூர் சமூகங்களால் மேற்கொள்ளப்படும் பாரம்பரிய மீன்பிடி மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்.

(ii) பின்வரும் நடவடிக்கைகளுக்கு மட்டுமே நிலச்சீராக்கம், வரப்பு கட்டுதல் முதலியன அனுமதிக்கப்படும்.

(a) சிறு துறைமுகங்கள், துறைமுகங்கள், படகுத்துறைகள், கப்பல் துறை மேடைகள், கடல் பகுதிகள், கப்பல் கட்டுமான சாய் தளங்கள், பாலங்கள்,



Verified RealEstate™

கடல் வழி இணைப்புகள் மற்றும் கடலோரக் காவல்படைக்கான மிதவைத் துறைமுகங்கள் முதலியன.

(b) கடலோர காவல்படை உட்பட பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் உத்திமுறை நோக்கத்திற்கான திட்டப்பணிகள்;

(c) மண் அரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்;

(d) நீர்வழிகள், கால்வாய்கள் மற்றும் துறைமுகங்களை பராமரித்தல் மற்றும் சுத்தம் செய்தல்;

(e) மணல் திட்டுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள், ஓதங்கள் ஒழுங்குப்படுத்திகளை நிறுவுதல், வெள்ள நீர் வடிகால்களை அமைத்தல் அல்லது உப்புநீர் உட்புகுவதை தடுத்தல் மற்றும் நன்னீர் மீள் நிரப்புதல் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.

(iii) துறைமுகங்கள், படகுத்துறைகள், கடல் வழிகள், கப்பல் கட்டும் சாய்தளங்கள், மண் அரிப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், அலைத்தாங்கிச் சுவர்கள், குழாய் தொடர்கள், கடல்வழி பாதுகாப்பு வசதிகள், மற்றும் அது போன்ற நீர்நிலை தொடர்பான நடவடிக்கைகள் அல்லது நேரடியாக தேவைப்படும் கடற்கரையோர வசதிகள்.

(iv) மரபுசாரா எரிசக்தி வழங்கல் மற்றும் கடல் காற்று, அலை ஆற்றல், கடல் வெப்ப ஆற்றல் மாற்றம் போன்ற தொடர்புடைய வசதிகள் மூலம் மின்சாரம்.

(v) அபாயகரமான பொருட்களை கப்பல்களில் இருந்து துறைமுகங்களுக்கு மாற்றுதல்.

(vi) சமையல் எண்ணெய், உரங்கள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற அபாயகரமற்ற சரக்குகளை அறிவிக்கையிடப்பட்ட துறைமுகங்களில் சேமித்தல்.

(vii) சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளை நீர்நிலைகளில் வெளியேற்றுவதற்கான வசதிகள்.

(viii) கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர பாதுகாப்பு கட்டமைப்பு உட்பட உத்திசார்ந்த மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டப்பணிகள் வகைப்படுத்தப்பட்ட திட்டப்பணிகள்.

(ix) அணுசக்தி துறையின் திட்டப்பணிகள்.

(x) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் ஆய்வு மற்றும் பிரித்தெடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகள் மற்றும் வசதிகள்.

(xi) 1957 ஆம் ஆண்டு சுரங்கத் தொழில் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (67 / 1957) முதலாவது விவர அட்டவணையின் பகுதி–B இன் கீழ் அறிவிக்கையிடப்பட்ட அணு கனிமங்களை ஆய்வு செய்தல் மற்றும் சுரங்க தொழில் செய்தல், இது



Verified RealEstate™

போன்ற அல்லது ஏனைய கனிமங்களுடன் இணைந்து அத்தகைய தொடர்புடைய கனிமம்(கள்).

(xii) சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் அறிவிக்கையிடப்பட்ட சுற்றுச்சூழல் தரநிலைகள் மற்றும் மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம் அல்லது மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியம் அல்லது மாசுக்கட்டுப்பாடு குழுவின் தொடர்புடைய உத்தரவுகளுக்கு இணக்கமாக மூலப்பொருட்களை கொண்டு செல்வதற்கு கடற்கரையோரத்திற்கு தேவைப்படும் வசதிகள், குளிர்ந்த நீரேற்றுவதற்கான வசதிகள் மற்றும் அனல் மின் நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் அல்லது குளிர்ந்த நீரை வெளியேற்றுவதற்கான வடிகால்.

(xiii) குழாய் தொடர்கள், மின்கம்பிகள் உட்பட போக்குவரத்து ஏற்பாட்டு முறைகள்.

(xiv) புயல் முன்னறிவிப்பு, கடல் கண்காணிப்பு தளங்கள், இயக்கம் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளை கண்காணிப்பதற்கான வானிலை தொலையுணர்வி/ரேடார்.

(xv) கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IV (A) பகுதிகளில், விதிவிலக்கான நேர்வுகளில், போதுமான சுற்றுச்சூழல் பாதுகாப்புகளுடன், பின்வருவனவற்றிற்கு உட்பட்டு, தொடர்புடைய மாநில அரசால் நினைவுச்சின்னங்கள் அல்லது நினைவிடங்களின் கட்டுமானம் மற்றும் தொடர்புடைய வசதிகளுக்கு வகைசெய்தல், அவையாவன –

(a) சம்பந்தப்பட்ட மாநில அரசு, கருத்தில் கொள்ளப்பட்ட மாற்று இடங்களின் விவரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அளவுருக்கள் உட்பட பல்வேறு அளவுருக்கள் மீதான மதிப்பு புள்ளிகளுடன்/வெயிட்டேஜ் மேட்ரிக்ஸுடன், மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IVA பகுதியில் திட்டப்பணிக்கான இடத்தை கண்டறிவதற்கான அறிக்கை அளிக்க வேண்டும். இந்த ஆணையம், திட்டத்தை ஆய்வு செய்து மாநில அரசு சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பதற்கு மத்திய அரசு ஆய்வு வரம்புகள் (ToRs) வழங்குவதற்காக மத்திய அரசுக்கு (சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்) பரிந்துரைக்கும்;

(b) மத்திய அரசு ஆய்வு வரம்புகள் (ToRs) அளித்ததன் பேரில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிவிக்கை எண் S.O.1533(E), நாள்: 14.9.2006– இன் கீழ் வகுக்கப்பட்ட நடைமுறையின்படி உத்தேச திட்டத்திற்கான பொது மக்களின் கருத்து கேட்பு நடத்துவதற்காக சம்பந்தப்பட்ட மாநில அரசு, சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்துடன் (EMP) வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIA), தொழிற்சாலைகளில் பேரழிவினால் ஏற்படும் விபத்துகளை கட்டுப்படுத்துவதற்கும், பாதிப்புகளை குறைப்பதற்கும் கையாளும்



Verified RealEstate™

நடைமுறை குறித்த திட்டம் (on–site) மற்றும் தொழிற்சாலைகளுக்கு வெளியே பேரழிவினால் ஏற்படும் விபத்துகளை கட்டுப்படுத்துவதற்கும், பாதிப்புகளை குறைப்பதற்கும் கையாளும் நடைமுறை குறித்த திட்டம் (off site) அவசரத் திட்டம் மற்றும் பேரழிவினால் ஏற்படும் விபத்தின் போதான வெளியேற்றுகைத் திட்டம் உட்பட பேரிடர் மேலாண்மைத் திட்டத்துடன் வரைவு இடர் மதிப்பீட்டு அறிக்கையைச் (DMP) மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அளிக்கும்.

(c) தொடர்புடைய மாநில அரசு, துணை – இனம் (b) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது பொதுமக்களால் எழுப்பப்பட்ட தொடர்புடைய பிரச்சினைகளை சரிசெய்த பின்னர், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்திற்கு, அவர்களின் ஆய்வு மற்றும் பரிந்துரைக்காக சூற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு, சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம், இடர் மதிப்பீடு மற்றும் பேரிடர் மேலாண்மைத் திட்டம் போன்றவற்றை மாநில கடற்கரை மண்டல மேலாண்மை வரைவுத் திட்டத்திற்கு அளிக்க வேண்டும்.

(d) திட்டப்பணியில், பொதுமக்களை மறுகுடியமர்த்தம் செய்வதற்கும் அவர்களின் மறுவாழ்விற்கும் அவசியமில்லை அல்லது திட்டப்பணி அமைவிடம் மக்கள் வசிக்கும் இடத்திலிருந்து தொலைவில் அமைந்துள்ளது என மத்திய அரசு மனநிறைவடையுமாயின், துணைப்பகுதி (b) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொது மக்களின் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கான தேவையை கைவிடலாம்.

**5.5 அணு சக்தி துறையிடமிருந்து கட்டமைப்புகளுக்கு அனுமதி பெறுவதற்கான தேவை:**

அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் (AERB) வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்ட எல்லை வரம்புகளுக்குள் வரும் புதிய கட்டமைப்புகளை நிறுவுவதற்கு உள்ளிட்ட யாதொரு வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர், அணுசக்தி துறையிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும்.

**6.** கடலோர மண்டல மேலாண்மை திட்டம் **(CZMP)**

(i) இந்த அறிவிக்கையின் விதித்துறைகளின் படி, அனைத்து கடலோர மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் 6.01.2011 ஆம் நாளிட்ட S.O எண் 19 (E) ஆம் எண் 2011 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் அறிவிக்கையின் கீழ் வகுக்கப்பட்ட அந்தந்த கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தை (CZMP) திருத்த வேண்டும் அல்லது நாளதுவரையாக்கப்பட வேண்டும். அதனை சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடம் ஒப்புதலுக்காக விரைவில் அளிக்க வேண்டும். இந்த அறிவிக்கையின் விதித்துறைகளுக்கு இணங்கக்கூடிய அனைத்து திட்ட

Verified RealEstate™

நடவடிக்கைகளும் இந்த அறிவிக்கையின் கீழ் நாளதுவரையாக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கிணங்க, மதிப்பீடு செய்யப்பட வேண்டும். கடலோர மண்டல மேலாண்மை திட்டம் திருத்தப்பட்டு அல்லது நாளதுவரையாக்கப்படும் வரை, இந்த அறிவிக்கையின் விதித்துறைகள் பொருந்தாது. அத்தகைய திட்டங்களுக்கு கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி பெறுவதற்கும் மற்றும் மதிப்பீடு செய்வதற்கும் 2011 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் விதித்துறைகளின் இணக்கமாகவுள்ள கடலோர மண்டல மேலாண்மை திட்டம் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும்.

(ii) தொடர்புடைய பொறுப்பாளர்களுடன் கலந்தாலோசித்து, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் நீடித்த கடலோர மேலாண்மை (இதன் பின்னர் தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையம் என குறிப்பிடப்படும்) தேசிய மையம் உட்பட அல்லது புகழ்பெற்ற மற்றும் அனுபவமிக்க அறிவியல் நிறுவனங்களை அல்லது முகவரமைப்புகளை ஈடுபடுத்துவதன் வாயிலாக, கடலோர மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை தயாரிக்கலாம் அல்லது நாளதுவரையாக்கலாம்.

(iii) கடலோர மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் இந்த அறிவிக்கையின் பிற்சேர்க்கை – IV இல் உள்ள வழிகாட்டுதல்களின்படி அந்தந்த நிலப்பகுதிகளுக்குள் உள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதிகளை அடையாளம் கண்டு வகைப்படுத்தும் வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை பொதுமக்கள் ஆலோசனையுடன் 1:25,000 பட அளவையுடன் தயாரிக்க வேண்டும்.

இந்த அறிவிக்கையின் விதித்துறைகளின் படி, அத்தகைய ஒப்புதலளிக்கப்பெற்ற கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் கட்டமைப்பிற்குள், நேர்விற்கேற்ப, மாநில அரசு, மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் நிருவாகம், உள்ளாட்சி அமைப்பு அல்லது தொடர்புடைய கடலோர மண்டல மேலாண்மை ஆணையம், இந்த அறிவிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகளையும் முறைப்படுத்தும்.

(iv) 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தில்(29/1986) வரையறுக்கப்பட்ட நடைமுறை/நடைமுறைகளின் படி, உரிய ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் உட்பட மதிப்பிடுவதற்காக, மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி சம்பந்தப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் மதிப்பீடு செய்வதற்காக கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தை வரைவு அளிக்க வேண்டும்.

(v) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி



Verified RealEstate™

நிருவாகங்களின் அந்தந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை அதன்பின்னர் பரிசீலித்து ஒப்புதல் அளிக்கும்.

(vi) பொதுவாக கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை ஐந்து ஆண்டுகள் நிறைவடையாமல் திருத்தம் செய்ய இயலாது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி திருத்தம் மேற்கொள்வதற்கு பரிசீலிக்கலாம்.

**7. அனுமதிக்கப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கான கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் அனுமதி– அதிகாரமளிப்பு:**

(i) இந்த அறிவிக்கையின் விதித்துறைகளுக்கு இணக்கமான அனைத்து அனுமதிக்கப்பட்ட அல்லது முறைப்படுத்தப்பட்ட திட்டப்பணி நடவடிக்கைகளை அவை தொடங்குவதற்கு முன், கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி பெற வேண்டும்.

(ii) இந்த அறிவிக்கையின்படி முறைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம் –IV பகுதிகளில் உள்ள அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகள் அல்லது திட்டப்பணிகள், சம்பந்தப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதிக்காக சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் மேற்கொள்ளப்படும்.

(iii) கடலோர ஒழுங்குமுறை மண்டலம் –II மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III பகுதிகள் முழுவதிலும் வரும் இந்த அறிவிக்கையின்படி ஏனைய அனைத்து அனுமதிக்கப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு, கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதியானது தொடர்புடைய கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம் II மற்றும் III போன்ற திட்டங்களால் பரிசீலிக்கப்படும். கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – I அல்லது கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – IV பகுதிகள் அல்லது அவை இரண்டிலும் கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி, சம்பந்தப்பட்ட கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

(iv) 14.09.2006 ஆம் நாளிட்ட S. O 1533 (E) ஆம் எண்ணிட்ட 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் விதித்துறைகளையும் அதே போன்று இந்த அறிவிக்கையின் விதித்துறைகளுக்கும் இணங்கக்கூடிய திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் வகைப்பாடு B மற்றும் வகைப்பாடு A திட்டங்களுக்கான அதிகார ஒப்படைப்பின் படி அதாவது மாநில சுற்றுச்சூழல் தாக்க



Verified RealEstate™

மதிப்பீட்டு ஆணையம் (இதன்பின்னர் SEIAA என குறிப்பிடப்படும்) அல்லது சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் தொடர்புடைய கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொடர்புடைய ஒப்பளிப்பு அலுவலரால் 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் கீழ் கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி மற்றும் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழலுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(v) 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க அறிவிக்கையின் விதித்துறைகளை பின்பற்றுவதற்காக வரையறுக்கப்பட்ட அளவைக் காட்டிலும் குறைவான பரப்பளவைக் கொண்ட கட்டடம் அல்லது கட்டுமானத் திட்டங்கள் குறித்த நேர்வில், தொடர்புடைய கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரைகளை பெற்ற பின்னர், இந்த அறிவிக்கையின்படி தொடர்புடைய உள்ளூர் மாநில அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் திட்டமிடல் அலுவலர்களால் ஒப்புதலளிக்கப்படும்.

(vi) 300 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள குடியிருப்புகளுக்கு மட்டுமே, சம்பந்தப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரைகள் இல்லாமல், சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகார அமைப்பினால் ஒப்புதல் அளிக்கப்படும் அத்தகைய அதிகார அமைப்புகள், ஒப்புதல் அளிப்பதற்கு முன்னர் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் செயற்குறிப்பை ஆய்வு செய்யும்.

**8. அனுமதிக்கத்தக்க மற்றும் முறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கான கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதிக்கான நடைமுறை:**

(i) இந்த அறிவிக்கையின் கீழ் முன் அனுமதி பெறுவதற்காக, திட்ட சார்பாளர்கள் பின்வரும் ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மாநிலம் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் விண்ணப்பிக்க வேண்டும்:–

(a) இந்த அறிவிக்கையின் பிற்சேர்க்கை V இன் படி திட்டச் சுருக்க விவரங்கள்.

(b) விரைவான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) கட்டடக் கட்டுமானத் திட்டங்கள் அல்லது வீட்டுத் திட்டங்களைத் தவிர, பொருந்தக்கூடியவாறான கடல் மற்றும் நிலப்பரப்பு கூறுகளை உள்ளடக்கிய அறிக்கை.

(c) திட்டங்களுக்கான திரண்ட ஆய்வுகளுடன் கூடிய விரிவான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, (14.09.2006 ஆம் நாளிட்ட S. O 1533 (E) ஆம் எண்ணிட்ட 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் விதித்துறைகளை பின்பற்றுவதற்காக வரையறுக்கப்பட்ட வரம்பை விடக் குறைவான பரப்பளவைக் கொண்ட கட்டடத் திட்டங்கள் அல்லது வீட்டுத்



Verified RealEstate ™

திட்டங்களை கட்டுவதற்கு நீங்கலாக) இந்த அறிவிக்கைக்கு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின், குறைந்த மற்றும் நடுத்தர அரிப்புப் பகுதிகளில் அமைந்திருப்பின்.

(d) 14.09.2006 ஆம் நாளிட்ட S. O 1533 (E) ஆம் எண்ணிட்ட 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் விதித்துறைகளை பின்பற்றுவதற்காக வரையறுக்கப்பட்ட வரம்பை விடக் குறைவான பரப்பளவைக் கொண்ட கட்டடத் திட்டங்கள் அல்லது வீட்டுத் திட்டங்களை கட்டுவதற்கு நீங்கலாக இடர் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பேரிடர் மேலாண்மைத் திட்டம்.

(e) தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்தினால் மேற்கொள்ளப்பட்டவாறான உயரலைக்கோடு அல்லது தாழ்வலைக்கோட்டின் எல்லை நிர்ணயத்தைப் பயன்படுத்தி, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் அடையாளம் காணப்பட்ட யாதொரு முகவமைப்புகளால் வரையப்பட்ட 1:4000 அளவு கோலுள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டல வரைபடம். (காண்க அதன் அலுவலக ஆணை எண் J – 17011/8/92–1A–III, நாள் 14.03.2014)

(f) இந்த அறிவிக்கையின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின்படி, திட்ட எல்லைகள் மற்றும் திட்ட அமைவிடத்தின் கடலோர ஒழுங்குமுறை மண்டல வகைப்பாட்டை உரியவாறாக குறிக்கும் வகையில் கடலோர ஒழுங்குமுறை மண்டல வரைபடத்தில் திட்ட அமைப்பு பொருத்தப்பட வேண்டும்.

(g) வழக்கமாக திட்டத்தின் அமைவிடத்தைச் சுற்றி 7 கிலோமீட்டர் சுற்றளவு உட்பட கடலோர ஒழுங்குமுறை மண்டல வரைபடம், கடலோர ஒழுங்குமுறை மண்டலம் –I, II, III மற்றும் IV பகுதிகள் பதற்றமான பகுதிகளாக அறிவிக்கப்பட்ட ஏனைய சுற்றுச்சூழல் பகுதிகளையும் குறிக்கிறது.

(h) கழிவு நீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு தொடர்பான திட்டங்களுக்கு, சம்பந்தப்பட்ட மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியம் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் மாசுக் கட்டுப்பாடுக் குழுவிடமிருந்து "நிறுவுவதற்கான ஒப்புதல்" அல்லது தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். மாசுக்கட்டுப்பாடு வாரியம் அல்லது மாசுக்கட்டுப்பாடு குழுவின் முன் அனுமதி பெறப்படாவிட்டால், இந்த அறிவிக்கையின் கீழ் அனுமதி பெற்றதைத் தொடர்ந்து, திட்டத்தின் கட்டுமான நடவடிக்கை தொடங்கும் முன், முன்மொழிபவரால் அது உறுதிசெய்ய வேண்டும்.

(ii) தொடர்புடைய கடலோர மண்டல மேலாண்மை ஆணையம், அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின்படி, இந்த அறிவிக்கைக்கு இணங்கும் வகையில், மேற்சொன்ன பகுதி (i) இல் உள்ள



Verified RealEstate™

ஆவணங்களை ஆய்வு செய்து, கீழே உள்ள முழுமையான விண்ணப்பத்தின் இரசீது பெறப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் பரிந்துரைகளை வழங்க வேண்டும்.

(a) 14.09.2006 ஆம் நாளிட்ட 1533 (E) ஆம் S.O எண்ணிட்ட 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையை பின்பற்றுகின்ற திட்டங்கள் அல்லது நடவடிக்கைகளுக்காக, 14.09.2006 ஆம் நாளிட்ட S. O 1533 (E) ஆம் எண்ணிட்ட 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் கீழ் முழு அனுமதியை பெறுவதற்கு வகைப்பாடு A மற்றும் வகைப்பாடு B திட்டங்களுக்கு முறையே கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் அதன் பரிந்துரைகளை சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும். இருப்பினும், கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – I அல்லது கடலோர ஒழுங்குமுறை மண்டலம் –IV பகுதிகளில் அமைந்துள்ள 'B' வகை திட்டங்களுக்கும், செயற்குறிப்பிற்கான கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி மற்றும் முழு சுற்றுச்சூழல் அனுமதியை வழங்குவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் மட்டுமே கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதிக்கான இறுதி பரிந்துரை செய்யப்படும்.

(b) கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – I அல்லது கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – IV பகுதிகளில் அமைந்துள்ள மற்றும் இந்த அறிவிக்கையின் விதித்துறைகளை பின்பற்றுகின்ற ஆனால் 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்படாத திட்டங்கள் அல்லது நடவடிக்கைகளுக்காக, கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் அதன் பரிந்துரைகளை சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு அனுப்பும்.

(c) கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – II அல்லது கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – III பகுதிகளில் அமைந்துள்ள மற்றும் இந்த அறிவிக்கையின் விதித்துறைகளை பின்பற்றுகின்ற ஆனால் 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் சேர்க்கப்படாத திட்டங்கள் அல்லது நடவடிக்கைகளுக்காக, முன்மொழிபவரால் முழுமையான செயற்குறிப்பின் இரசீது பெறப்பட்ட அறுபது நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தினால் அனுமதிக்காக பரிசீலிக்கப்படும்.

(d) மேற்சொன்ன 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க அறிவிக்கையின் விதித்துறைகளை பின்பற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வரம்பை விட குறைவான பரப்பளவு கொண்ட கட்டுமானத் திட்டங்கள் இந்த அறிவிக்கையின் விதித்துறைகளை பின்பற்றும் நேர்வில், கடலோர மண்டல மேலாண்மை ஆணையமானது, சம்பந்தப்பட்ட மாநிலம் அல்லது

மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் திட்டமிடல் அதிகாரிகளால் அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக தங்கள் பரிந்துரைகளை அனுப்ப வேண்டும்.

(iii) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இந்த அறிவிக்கையின் கீழ் அனுமதி பெறுவதற்கான முழுமையான திட்ட செயற்குறிப்புகளை அறுபது நாட்களுக்குள் பரிசீலிக்கும்.

(iv) கடலோர மண்டல மேலாண்மை ஆணையங்கள் அவற்றின் மறுசீரமைப்பு அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் முறையாக செயல்படாத நேர்வில், மேற்சொன்ன அறிவிக்கையின் விதித்துறைகளின் படி செயற்குறிப்புகளை பரிந்துரைக்கவும் கருத்துக்களை வழங்கவும் அந்தந்த மாநிலங்களின் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தின் பாதுகாவலராக இருக்கும் மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி பகுதி நிருவாகத்தின் சுற்றுச்சூழல் துறை இதற்கு பொறுப்பாகும்.

(v) இந்த அறிவிக்கையின் கீழ் திட்டங்களுக்கு வழங்கப்படும் அனுமதி ஏழு ஆண்டுகளுக்கு செல்திறனுள்ளதாக இருக்கும். ஆனால், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு செயல்பாடுகள் தொடங்கும்.

செல்திறன் காலத்திற்குள் விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் விண்ணப்பம் செய்தால், சம்பந்தப்பட்ட மாநிலம் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் அனுமதிக்கான செல்திறனை நீட்டிப்பதற்கான பரிந்துரையுடன், அதிகபட்சமாக மூன்று ஆண்டுகளுக்கு செல்திறன் காலம் நீட்டிக்கப்படலாம்.

**(vi) அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு:**

(a) நாட்காட்டி ஆண்டின் ஒவ்வொரு ஜூன் 1 மற்றும் டிசம்பர் 31 ஆம் நாட்களில், திட்டத்தை முன்மொழிபவர், சுற்றுச்சூழல் அனுமதியின் வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான அரையாண்டு இணக்க அறிக்கைகளை வன் மற்றும் மென் நகல்களில், சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை ஆணையத்திடம் அளிக்க வேண்டியது கட்டாயமாகும். திட்ட முன்மொழியாளரால் அளிக்கப்பட்ட அனைத்து இணக்க அறிக்கைகளும் பொது தளத்தில் வெளியிடப்படும் மற்றும் அதன் நகல்கள் தொடர்புடைய கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் விண்ணப்பித்த யாதொரு நபருக்கும் வழங்கப்படும்.

(b) இணக்க அறிக்கை சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை ஆணையத்தின் இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்படும்.

vii) கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்கு, தனிப்பட்ட இணையதளமொன்றை உருவாக்கி, நிகழ்ச்சி நிரல், நடவடிக்கைக் குறிப்புகள், எடுக்கப்பட்ட முடிவுகள், தடைநீக்கக் கடிதங்கள், விதி மீறல்கள்,



Verified RealEstate TM

வீதி மீறல்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மாண்புமிகு நீதிமன்றத்தின் உத்தரவுகள் உட்பட நீதிமன்ற பொருண்மைகள் மற்றும் அந்தந்த மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டம் (CZMP) ஆகியவற்றை வெளியிடுவது கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பொறுப்பாகும்.

**9. இந்த அறிவிக்கையின் செயலாக்கம்:**

(i) இந்த அறிவிக்கையின் விதித்துறைகளை செயல்படுத்துதல் மற்றும் அதன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கி செயல்படும் நோக்கங்களுக்காக, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி நிருவாகம், கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் மற்றும் மாநில அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் ஆகியவற்றுடன் 1986ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்(29/1986) கீழ் அசல் அல்லது ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

(ii) நீதிப்பேராணை மனு 664/1993– இல் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளின் அடிப்படையில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் தேசிய கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் மற்றும் மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் அமைப்பின், பதவிக்காலம் மற்றும் ஆணை ஆகியவை குறித்து ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

(iii) இந்த அறிவிக்கையை அமல்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி கடலோர மண்டல மேலாண்மை ஆணையமும் முதன்மையான பொறுப்புடையவர்களாவர். மேலும் இந்த பணியில் உதவுவதற்கு, மாநில அரசும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியும் சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதியின் தலைமையில் மீனவர்கள் உட்பட உள்ளூர் பாரம்பரிய கடலோர சமூகங்கங்களைச் சார்ந்த குறைந்தது மூன்று பிரதிநிதிகளை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான குழுக்களை அமைக்க வேண்டும். மேலும் மாநில அரசு, இந்த அறிக்கையை செயல்படுத்துவது குறித்து அந்தந்த மாவட்ட நீதிபதிகள் அளவில் கருதிப்பார்க்கலாம்.

(iv) 06.01.2011ஆம் நாளிட்ட நிலை ஆணை எண். 19(E), 2011ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் விதித்துறைகளின் கீழ் மீனவர்கள், பழங்குடியினர் உள்ளிட்ட பாரம்பரிய கடலோர சமூகங்களின் குடியிருப்புகள் அனுமதிக்கப்பட்டன. ஆனால் மேற்சொன்ன அறிவிக்கையின் கீழ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையான அனுமதி பெறாதவர்கள் குறித்து உரிய கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, குடியிருப்பு பகுதிகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்படும், அவையாவன:–



VerifiedRealEstate™

(a) இவை யாதொரு வணிக செயல்பாட்டிற்கும் பயன்படுத்தக்கூடாது;

(b) பாரம்பரிய கடலோர சமூகங்கள் அல்லாத பிற சமூகத்திற்கு இவற்றை விற்பனை செய்யக்கூடாது அல்லது மாற்றம் செய்யக் கூடாது.

**10. தனி கவனம் செலுத்தவேண்டிய பகுதிகள் :**

**10.1** மிகவும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய கடற்கரைப் பகுதிகள் (**CVCA**):

(i) துணைப் பத்தி 3.1 –இல் குறிப்பிடப்பட்டுள்ள மிகவும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய அனைத்து கடற்கரைப் பகுதிகளுக்காக ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டங்கள் (IMPs) தயாரிக்கப்பட வேண்டும். மருந்தகங்கள், பள்ளிகள், மழைக்காலத்தில் பொதுமக்கள் தங்குமிடம் (மழைக்கால முகாம்கள்), பொது கழிப்பறைகள், பாலங்கள், சாலைகள், படகு இறங்குமிடங்கள், குடிநீர் வழங்கல், வடிகால், கழிவுநீர் கால்வாய் மற்றும் கடல் மட்டம் உயர்வினால் ஏற்படும் தாக்கம் மற்றும் ஏனைய இயற்கை பேரிடர்கள் போன்ற உள்ளூர் சமூகங்களின் தேவைகளையும் சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையையும் கருத்தில் கொள்ள வேண்டும். கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

(ii) ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்படும் அத்தகைய காலம் வரையில், பாரம்பரியமாக குடியிருப்பவர்களுக்குத் தேவையான மருந்தகங்கள், பள்ளிகள், மழை/சூறாவளி காலங்களில் பொதுமக்களுக்கான முகாம்கள், பொது கழிப்பறைகள், பாலங்கள், சாலைகள், படகு இறங்குமிடங்கள், குடிநீர் வழங்கல், வடிகால், கழிவுநீர் கால்வாய் ஆகியவற்றைக் கட்டுவதற்கு மீனவர்கள் உட்பட கடலோர சமூகங்களின் கருத்துக்களையும் உரியவாறு கருத்தில் கொண்டு, கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தால் சூழ்நிலைகளின் அடிப்படையில் தனித்தனியாக அனுமதி வழங்கப்படும்.

10.2 உள்நாட்டு கழிமுகத் தீவுகள் மற்றும் பெருநிலப்பரப்பின் கரையோரப் பகுதியையொட்டிய தீவுகளுக்கான கடலோர ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) :

(i) கடலோர கழிமுகங்களிலுள்ள அனைத்து உள்நாட்டு தீவுகளும், பெருநிலப்பரப்பின் கரையோரப் பகுதியையொட்டிய தீவுகளும் இந்த அறிவிப்பின் கீழ் வரும்.

(ii) பெருநிலப்பரப்பின் கரையோரப் பகுதியையொட்டிய தீவுகள் மற்றும் தீவுகளின் தனித்துவமான கடலோர அமைப்புகளைக் கருத்தில் கொண்டு, அத்தகைய கடலோரப் பகுதிகளிலுள்ள இடப்பற்றாகுறை உயரலைக்கோட்டிலிருந்து 20 மீட்டர் தொலைவிலுள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டலம், அத்தகைய தீவுகளுக்கு ஒரே மாதிரியாகப் பொருந்தும். மேலும் அதன் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு முறைப்படுத்தப்படும் . :–



Verified RealEstate ™

(a) இந்த தீவுகளின் உயரலைக்கோட்டிலிருந்து 20 மீட்டர் தொலைவிற்குள் உள்ளூர் சமூகங்களின் தற்போதுள்ள குடியிருப்பு பிரிவுகள் பழுதுபார்க்கப்படலாம் அல்லது மறுசீரமைக்கப்படலாம். இருப்பினும், இந்த மண்டலத்தில் புதிய கட்டுமானம் ஏதும் அனுமதிக்கப்படாது .

(b) உரிய சுற்றுச்சூழல் பாதுகாப்புகளுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு மீன்பிடித் தளம், மீன் உலர்த்தும் தளங்கள், வலையை சரிசெய்யும் தளம், பாரம்பரிய முறைப்படி மீன் பதப்படுத்துதல், படகு கட்டும் தளங்கள், பனிக்கட்டி ஆலை, படகு பழுதுபார்ப்பு மற்றும் அது போன்ற ஏனையவை கடலோர ஒழுங்குமுறை மண்டல வரம்புகளில் மேற்கொள்ளப்படலாம்.

(iii) 06.01.2011 ஆம் நாளிட்ட நிலை ஆணை எண் 20(E), 2011 ஆம் ஆண்டு தீவு பாதுகாப்பு மண்டல அறிவிக்கையின்படி, இலட்சத்தீவுகள் மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகளிலுள்ள சிறிய தீவுகளுக்கு பொருந்தக்கூடியவாறான ஒருங்கிணைந்த தீவு மேலாண்மை திட்டங்கள் அத்தகைய அனைத்து தீவுகளுக்காக அந்தந்த மாநிலங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியால் உருவாக்கப்பட்டு, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடம் அளிக்கப்பட்டது. மேலும் ஒருங்கிணைந்த தீவு மேலாண்மை திட்டங்கள் (IIMPS) உருவாக்கப்படும் வரை, இந்த அறிவிக்கையின் விதிகள் பொருந்தாது. மேலும் 06.01.2011 ஆம் நாளிட்ட நிலை ஆணை எண் 19 (E), 2011ஆம் ஆண்டு தீவு பாதுகாப்பு மண்டல அறிவிக்கையின் விதித்துறைகளின் படி கடலோர ஒழுங்குமுறை மண்டல மேம்பாட்டுத்திட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

**10.3 மும்பை பெருநகரத்தின் மாநகராட்சி எல்லைக்குள் வருகின்ற கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதிகள்:**

(i) பெருநகர மும்பை மாநகராட்சியின் 'பசுமைப் பகுதியை' பாதுகாத்து பேணுவதற்கு, கடலோர ஒழுங்குமுறை மண்டலம் –II இன் மேம்பாட்டுத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து திறந்தவெளிகள், பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவை மேம்படுத்தக்கூடாத மண்டலமாக வகைப்படுத்தப்பட வேண்டும். மேலும் அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பில் 15 விழுக்காட்டில் மட்டுமே பொழுதுபோக்கு அல்லது விளையாட்டு தொடர்புடைய செயல்பாட்டுகளுக்கான பொதுமக்களுக்கான வசதிகள், அரங்கம் மற்றும் உடற்பயிற்சி கூடம் ஆகியவற்றைக் கட்டுவதற்கான அனுமதியளிக்கப்பட வேண்டும். மேலும் அத்தகைய திறந்தவெளிப்பகுதிகளை குடியிருப்பு அல்லது வணிகப் பயன்பாட்டுக்கு அனுமதிக்கக்கூடாது.

(ii) நகராட்சி பகுதியிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க மாற்று இடவசதி கிடைக்காத விதிவிலக்கான சூழ்நிலைகளில், கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரைகள் மற்றும் மத்திய அரசின்



Verified RealEstate TM

ஒப்புதலுக்கு உட்பட்டு, கடலோர ஒழுங்குமுறை மண்டலம் –I பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுவது நகராட்சி அதிகாரிகளால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அலையாத்திக்காடுகள் அமைந்துள்ள பகுதியில் அத்தகைய சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும் நேர்வில், பாதிக்கப்படக்கூடிய அலையாத்திக்காடுகள் அல்லது அழிக்கப்பட்ட அல்லது வெட்டப்பட்ட அலையாத்திக்காடுகளை ஈடுசெய்யும் வகையில் குறைந்தளவு மூன்று மடங்கு நிலம் அலையாத்திக்காடுகளில் வளரக்கூடிய செடிகளை பயிரிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

[கோப்பு எண்.19–112/2013–IA–III]

ரிதேஷ் குமார் சிங், இணைச் செயலாளர்.

Verified RealEstate™

பிற்சேர்க்கை–I

**சுற்றுச்சூழல் ரீதியாக சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் பாதுகாப்பு, பேணுகை மற்றும் மேலாண்மை கட்டமைப்பு முறை**

கடலோர மற்றும் கடல்சார் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் (ESAs) மற்றும் நில வடிவங்களின் தோற்ற அம்சங்கள் கடற்கரையின் செயல்பாடுகளை பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அலையாத்திக்காடுகள், கடற்கரைகள், பவளப்பாறைகள் போன்றவை, கடலோர அரிப்பு, கரையோர மாற்றம், உப்பு நீர் உட்புகுதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. மேலும் பெரிய அலைகள், சூறாவளி மற்றும் சுனாமி போன்ற கடலோர ஆபத்துகளுக்கு எதிராக இயற்கையான பாதுகாப்பாகவும் செயல்படுகின்றன. சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் கடலோர வாழ்வாதாரத்திற்கு நேரடி மற்றும் மறைமுக சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை வழங்குவதன் வாயிலாக கடற்கரையின் உயிரியல் ஒருங்கிணைப்புத் தன்மையைப் பராமரிக்கிறது. கூடுதலாக, பல விலைமதிப்புமிக்க தொல்லியல் மற்றும் பாரம்பரியம் சார்ந்த தளங்களும் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளன. எனவே மேற்சொன்ன பகுதிகள், வடிவம்/தனிச்சிறப்புகள் மற்றும் அத்தகைய இடங்களின் பாதுகாப்பு மற்றும் பேணுகை இன்றியமையாததாகும்.

**பொதுவான நடவடிக்கைகள்**

(i) அனைத்து சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, செயற்கைக்கோள் தரவைப் பயன்படுத்தி தேசிய கடலோர நிலைத் திட்ட மேலாண்மை மையத்தால் எல்லை வரையறுக்கப்பட வேண்டும்.

(ii) மாநில அரசுகள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி நிருவாகங்கள் அங்கீகரிக்கப்பட்ட முகமைகள் வாயிலாக சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் பாதுகாப்பு மற்றும் பேணுகையை சிறப்பித்துக் காண்பிக்கும் இந்த அறிவிக்கையிலுள்ள வழிகாட்டுதல்களின்படி கடலோர மண்டல மேலாண்மைத் (CZMP) திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

(iii) இந்த அறிவிக்கையின் கீழ் அனுமதிக்கப்படும் நடவடிக்கைகள் கடலோர மண்டல மேலாண்மைத் (CZMP) திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

சூழலியல் தடை செய்யப்பட்ட சுற்றுச்சூழல் காப்பகங்கள் ஒவ்வொன்றின் பாதுகாப்பு, பேணுகை மற்றும் மேலாண்மைக்கு பின்வரும் குறிப்பிட்ட நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

1.1 அலையாத்திக்காடுகள்:

(i) 1980ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டத்தின் (69/ 1980) படி அலையாத்திக்காடுகள் வனப்பகுதிகளாக அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிக்கையில் என்ன சொல்லியிருப்பினும், 1980ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டத்தின் (69/ 1980) படி வன நிலம் என்று சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் நிருவாகங்கள் அல்லது மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட அலையாத்திக்காடுகளுக்கு மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தும்.

(ii) 1980 ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் அறிவிக்கப்படாத அலையாத்திக்காடுகள் :

(a) அரசு நிலத்திலுள்ள அலையாத்திக்காடுகள் மாநில அரசுகள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் நிருவாகங்களால் தயாரிக்கப்படும் விரிவான திட்டத்தின் அடிப்படையில் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் அலையாத்திக்காடுகள் 1000 சதுர மீட்டருக்கு மேல் இருக்கும் நேர்வில், அலையாத்திக்காடுகளைச் சுற்றி 50 மீட்டர் இடைப்பட்ட பகுதிக்கு வகைசெய்ய வேண்டும். இத்தகைய 50 மீட்டர் இடைப்பட்ட பகுதி பூங்காக்கள் அமைத்தல், சதுப்புநில பல்லுயிர் தொடர்பான ஆராய்ச்சி வசதிகள், பாதுகாப்பிற்கான வசதிகள் மற்றும் பொதுமக்களின் பல்வேறு வசதிகளுக்காக பயன்படுத்தப்படலாம்.

(b) தனியார் நிலத்திலுள்ள அலையாத்திக்காடுகளுக்கு இடைப்பட்ட பகுதி தேவையில்லை.

**1.2 பவளங்கள் மற்றும் பவளப்பாறைகள் மற்றும் தொடர்புடைய பலவகை உயிரினத் தொகுதி :**

(i) பவளம் மற்றும் பவளப்பாறைகள் மற்றும் சுற்றுப்புறங்களை அழிக்கும் செயல்பாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

(ii) ஆராய்ச்சி நோக்கங்களுக்காக தேவைப்படும் சிறிய அளவுகள் நீங்கலாக அனைத்து பவளங்கள் மற்றும் பவளப்பாறைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

(iii) 1972ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டத்தின் (53/1972) கீழ் தேவையான அனுமதிகளைப் பெற்ற பின்னர், மீளுருவாக்கம் தேவைப்படும் இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்கள் வாயிலாக பவளங்கள் மற்றும் பவளப்பாறைகள் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



Verified RealEstate™

(iv) இறந்த அல்லது அழிக்கப்பட்ட அல்லது இத்தகைய இரண்டு வகையிலான பவளப் பகுதிகளும் மீளுருவாக்கம் மற்றும் மறுசீரமைப்புக்காக எடுத்துக்கொள்ளப்படும். பவளங்கள் மற்றும் பவளப்பாறைகளின் பாதுகாப்பு மற்றும் பேணுகை பின்வருமாறு மேற்கொள்ளப்பட வேண்டும் :–

(a) செயல்திறனுள்ள மற்றும் உயிருள்ள பவளங்கள் மற்றும் பவளப்பாறைகள் அடையாளம் காணப்பட்டு, வரையறுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, 1986ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் (26/ 1986) கீழ் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிக்கையிடப்பட வேண்டும்.

(b) பவளங்கள், பவளப்பாறைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்வகை உயிரினத் தொகுதி பெருக்கத்தின் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் சுரங்கம், ஆலைக் கழிவுநீர் மற்றும் கழிவுநீர் வெளியேற்றம், தூர்வாருதல், கப்பலைச் சமப்படுத்தும் நீர் வெளியேற்றுதல், கப்பல் கழுவுதல், பாரம்பரிய முறையில் அல்லாத அழிவுகரமான மீன்பிடித்தல், பவளப் பகுதிகளிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கட்டுமான நடவடிக்கைகள் போன்ற ஏனைய யாதொரு செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

1.3 1972 ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டம், (53/ 1972), 1980 ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டம் (69/1980) அல்லது 1986ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் (29/1986) ஆகியவற்றின் விதிகளின் கீழ் அறிவிக்கப்பட்ட தேசிய பூங்காக்கள், கடல் பூங்காக்கள், சரணாலயங்கள், காப்புக்காடுகள், வனவிலங்கு வாழ்விடங்கள் மற்றும் உயிர்க்கோளக் வளக்காப்பகங்கள் உட்பட ஏனைய பாதுகாக்கப்பட்ட பகுதிகள் பின்வருமாறு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் :–

(i) மேற்சொன்ன பகுதிகளின் பேணுகை மற்றும் பாதுகாப்பு நேர்விற்கேற்ப உரிய சட்டங்கள், அறிவிக்கைகள் அல்லது வழிகாட்டுதல்களின் விதிகளின்படி இருக்க வேண்டும்.

(ii) அதிகரித்துவரும் புயல்கள், பேரலைகள் மற்றும் வெள்ளம் ஆகியவற்றால் ஏற்படும் உயிர் மற்றும் பொருள் சேதங்களைத் தடுக்கும் வகையில், கடலோரப் பகுதியில் வனப் பகுதியை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iii) சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதி நிருவாகங்கள் அமைவிடத்திற்கு ஏற்ற நடவுப் பொருட்களைக் கொண்ட கடலோரப் பசுமை கவசங்கள் அல்லது உயிர்க் கவசங்களை உருவாக்குவதற்கு போதுமான நிதியை வழங்க வேண்டும்.



Verified RealEstate™

1.4 உப்பு சதுப்பு நிலங்கள் :

உப்பு சதுப்பு நிலங்களின் பேணுகை மற்றும் பாதுகாப்பு பின்வருமாறு :–

(i) உவர் சதுப்பு நிலப் பகுதிகள் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் உவர் சதுப்பு நிலங்களில் உள்ள பல்வகை உயிரினத் தொகுதிகள் பெருக்கத்திற்கான தகவமைவை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) மேல்நிலை கம்பிவடங்களைக் கொண்டு செல்லுதல், அல்லது மின் அனுப்புகை கொண்டு செல்லுதல் மற்றும் மின் அனுப்புகை கம்பிவடங்களை நிலத்தடியில் பதித்தல் போன்ற செயல்பாடுகள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

(iii) உவர் சதுப்பு நிலங்களில் பாரம்பரிய மீன்பிடித்தல் அனுமதிக்கப்படும்.

(iv) உவர் சதுப்புப் நிலப் பகுதிகளைச் சுற்றியுள்ள தற்காலிக சுற்றுலா வசதிகள், வழிகாட்டிக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைகளுக்கு உட்பட்டு கருதிப் பார்க்கப் படலாம்.

(v) தேசிய கடலோர நிலைத் திட்ட மேலாண்மை மையத்தால் அடையாளம் காணப்பட்ட மற்றும் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தில் வரையறுக்கப்பட்ட குறைந்த பல்லுயிர்த்தன்மை கொண்ட சில உவர் சதுப்பு நிலங்களில் உப்பளம் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பரிசீலிக்கப்படலாம்.

**1.5 கடலாமைகள் முட்டையிடும் இடங்கள் பின்வருமாறு பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் :–**

(i) தொடர்புடைய மாநில அரசுகள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சி பகுதிகளால் அடையாளம் காணப்பட்ட கடலாமைகள் முட்டையிடும் இடங்கள் 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின்படி பாதுகாக்கப்பட வேண்டும்.

(ii) கடலாமைகள் முட்டையிடும் இடங்களிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இந்த தளங்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு இன்றியமையாதவை நீங்கலாக, ஒளி மற்றும் ஒலி மாசுபாட்டை ஏற்படுத்துதல் உட்பட, யாதொரு நடவடிக்கையும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(iii) கடலாமைகள் முட்டையிடும் இடங்களைப் பாதுகாப்பதற்கான விதிவிலக்கிற்கு இடந்தராத வகையில் அதற்கான பாதுகாப்புத் திட்டங்களை வகுத்து தொடர்புடைய சம்பந்தப்பட்ட மாநில அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சி பகுதி அதிகார மன்றங்கள் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

Verified. RealEstate ™

**1.6 குதிரை லாட நண்டுகளின் வாழ்விடங்கள் பின்வருமாறு பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்:**

(i) அடையாளம் காணப்பட்ட வாழ்விடங்கள் பராமரிக்கப்பட்டு மற்றும் பாதுகாக்கப்பட வேண்டும்

(ii) குதிரை லாட நண்டுகளின் சூழலியல் அமைப்புகளைப் பாதிக்கும் வகையில் யாதொரு நடவடிக்கைகளும் இவ்வாழ்விடங்களில் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படக்கூடாது.

**1.7 கடல்சார்புல் படுகைகள் பின்வருமாறு பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்:**

(i) அடையாளம் காணப்பட்ட கடல்சார்புல் படுகைகள் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

(ii) கடல்சார் புல் படுகைகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையிலுள்ள எவ்வித வளர்ச்சி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படக்கூடாது.

(iii) மாநிலங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள், கடல்சார் புல் படுகைகள் கரிமத் தேக்கிகளாகச் செயல்படுவதால், கடலோர நீர் பரப்புகளில், கடல்சார் புல் படுகைகளை அதிகரிக்க செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.8 பறவைகள் கூடு கட்டும் இடங்கள் பின்வருமாறு பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்:–**

(i) பறவைகளின் உள்ளூர் புலம்பெயர்வுத் தடங்கள் உட்பட பறவைகள் கூடு கட்டும் இடங்கள், அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். அத்தகைய பகுதிகளில் காற்றாலைகள் அமைத்தல், மின் அனுப்புகை கம்பிகளை அமைத்தல், போன்றவை நிர்மாணிப்பது உட்பட, கூடு கட்டும் இடங்கள் மற்றும் பறவைகள் புலம்பெயரும் தடங்களில் பாதகமான விளைவை ஏற்படுத்துகிற யாதொரு வளர்ச்சி பணிகளையும் மேற்கொள்ள கூடாது.

(ii) பறவைகளுக்கு உகந்த வாழ்விடங்களை ஏற்படுத்தித் தரும்வகையில், உவர் சதுப்பு நிலங்கள் மற்றும் ஏனைய கடலோர நீர்நிலைகளின் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துதல் உட்பட, வனங்களின் பரப்பு மற்றும் அலையாத்திக் காடுகளின் பரப்புகளை அதிகரிப்பதற்குத் தேவையான, முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

Verified RealEstate ™

1.9 புவி அமைப்பியல் முக்கியத்துவம் வாய்ந்த மண்டலங்கள் பின்வருமாறு பாதுகாக்கப்பட்டு நிருவகிக்கப்பட வேண்டும்:

(i) அடையாளம் காணப்பட்ட மணல் மேடுகள் பின்வருமாறு பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்:

(அ) 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட மணல் மேடுகள் அறிவிக்கையிடப்பட வேண்டும்;

(ஆ) நெடுங்கழிகள் கொண்டு உயர்த்திக் கட்டப்பட்ட நடைபாதைகள், கூடாரங்கள் மற்றும் அவற்றையொத்த சுற்றுச்சூழலுக்கு உகந்த தற்காலிக சுற்றுலா வசதிகளை வழங்குதல் நீங்கலாக, யாதொரு வளர்ச்சிப் பணிகளுக்கும் அனுமதியளிக்கக் கூடாது.

(இ) அணு கனிமங்களைப் பிரித்தெடுப்பதற்காக மணல் மேடுகளிலிருந்து தாதுக்கள் எடுக்கப்பட்ட மணல் கொண்டோ அல்லது ஏனைய பொருத்தமான மணலைப் பயன்படுத்தி முறையாக நிரப்புதலுக்குட்பட்டு மணலெடுத்தல் நீங்கலாக ஏனைய வகையில் மணல் மேடுகளில் மணல் அள்ளுவது தடைசெய்யப்பட வேண்டும்.

(ஈ) மணல் மேடுகளின் மீது மணல் அரிப்பு/அழிவுக்கு வழிவகுக்கிறவாறான யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக்கூடாது;

(உ) பூர்வீகத் தாவரங்களைக் கொண்டே மணல் மேடுகளில் காடு வளர்ப்பு, மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஊ) அத்தகைய எல்லை வரையறை செய்யப்பட்ட மணல் மேடுகளுக்கான மேலாண்மைத் திட்டங்களை மாநிலங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள் வகுக்க வேண்டும்.

**(iii) மணற் கடற்கரைகள்:**

(அ) அணு கனிமங்களைப் பிரித்தெடுப்பதற்காக மணல் மேடுகளிலிருந்து தாதுக்கள் எடுக்கப்பட்ட மணல் கொண்டோ அல்லது ஏனைய பொருத்தமான மணலைப் பயன்படுத்தி முறையாக நிரப்புதலுக்குட்பட்டு மணலெடுத்தல் நீங்கலாக ஏனைய வகையில் மணற் கடற்கரையில் மணல் அள்ளுவது தடைசெய்யப்பட வேண்டும்.

(ஆ) கடற்கரைகளில் அனுமதிக்கப்பட்ட வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது, அருகே உள்ள கடற்கரை பகுதிகளில் கடற்கரைகள் அழிவது கணிக்கப்பட்டால், இழப்புகளை ஈடுகட்டத் தேவையான கடற்கரை வளத்தை மேம்படுத்த திட்ட அதிகாரிகளால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் மேலும் அதன் நீண்ட கால பராமரிப்பு அவர்களால் உறுதி செய்யப்பட வேண்டும்.



Verified RealEstate™

(இ) அத்தகைய எல்லை வரையறை செய்யப்பட்ட கடற்கரைகளுக்கான மேலாண்மைத் திட்டங்களை மாநிலங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிபகுதிகள் வகுக்க வேண்டும்.

**(iv) உயிரியல் ரீதியாக செயல்முனைப்பு கொண்ட சமதள சதுப்பு நிலப்பகுதிகள்:**

(அ) மாநில அரசுகள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் நிருவாகங்களுடன் இணைந்து உயிரியல் ரீதியாக செயல் முனைப்பு கொண்ட சமதள சதுப்பு நிலப்பகுதிகள் தேசிய கடலோர நிலைத் திட்ட மேலாண்மை மையத்தினால் அடையாளம் காணப்பட வேண்டும்.

ஆ) அத்தகைய எல்லை வரையறை செய்யப்பட்ட உயிரியல் ரீதியாக செயல் முனைப்பு கொண்ட சமதள சதுப்பு நிலப்பகுதிகளுக்கான மேலாண்மைத் திட்டங்களை மாநிலங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் வகுக்க வேண்டும்.

**1.10 தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் அல்லது கட்டமைப்புகள் மற்றும் மரபுசார் தளங்கள்:**

(i) இந்திய தொல்லியல் துறையால் அறிவிக்கப்பட்ட அனைத்து தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த கட்டமைப்புகள் மற்றும் பாரம்பரிய தளங்களை தொடர்புடைய சட்டங்கள் விதித் துறைகள், அறிவிக்கைகள் மற்றும் வழிகாட்டிக் குறிப்புகளின்படி பாராமரித்து பாதுகாப்பதற்கு மாநில தொல்லியல் முகமைகள் பொறுப்பேற்க வேண்டும்.

(ii) அடையாளம் காணப்பட்ட தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பாரம்பரிய மிக்க கட்டமைப்புகளை பாதிக்கிற யாதொரு நடவடிக்கைகளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(iii) இத்தகைய கட்டமைப்புகள் அல்லது பகுதிகள் பாதுகாக்கப்படுவதையும் அவற்றின் முகப்புகள் / அடிதளத்தை மாற்றாமல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். வெளிப்புற கட்டடக்கலை வடிவமைப்பை மாற்றாமல், உட்புறங்களை கவனமாக வடிவமைத்த பின்னர், தொடர்புடைய விதிமுறைகளின்படி அத்தகைய கட்டமைப்புகள் பயன்படுத்துவது குறித்து கருதிப் பார்க்கலாம்.

Verified RealEstate ™

பிற்சேர்க்கை–II

**கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – 1 A நீங்கலாக, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் சேமிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பெட்ரோலியம் மற்றும் இரசாயனப் பொருட்களின் பட்டியல்,**

(i) கச்சா எண்ணெய்;

(ii) நீர்மமாக்கப்பட்ட பெட்ரோலிய எரி வாயு;

(iii) மோட்டார் சாராவி ; (Motor Spirit)

(iv) மண்ணெண்ணெய்;

(v) வானூர்தி எரிபொருள்;

(vi) அதிவேக டீசல் எரி பொருள்;

(vii) மசகெண்ணெய்;

(viii) பியூட்டேன்;

(ix) புரொபேன்;

(x) அழுத்தப்பட்ட இயற்கை எரி வாயு;

(xi) நாப்தா;

(xii) உலை/சூளை பயன்பாட்டு அடுப்பு எண்ணெய்; (Furnace oil)

(xiii) குறைந்தளவு சல்பர் கொண்ட சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் (LSHS)

(xiv) திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு

(xv) உரங்கள் மற்றும் உரத் தயாரிப்பு மூலப் பொருட்கள்

(xvi) அசிட்டிக் அமிலம்

(xvii) மோனோ எத்திலின் கிளைக்கால்

(xviii) பாராக்சைலின்

(xix) ஈத்தேன்

(xx) ப்யூட்டாடைன் (Butadine)

(xxi) மெத்தனால்

(xxii) வன்காரம்

(xxiii) பிட்டுமென் (நிலக்கீல்)

****

**பிற்சேர்க்கை–III**

வரையறுக்கப்பட்டுள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் அமைந்துள்ள கடற்கரை ஓய்வு விடுதிகள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றின்



Verified RealEstate™

மேம்பாட்டுப்பணிகள் மற்றும் சுற்றுலா வளர்ச்சித் திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள்

**1. கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – II**

பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கடலோர ஒழுங்குமுறை மண்டலம்– II –இல் வரையறுக்கப்பட்டுள்ள பகுதிகளில் சுற்றுலாப்பயணிகள் அல்லது பார்வையாளர்கள் தங்குவதற்காக கடற்கரை ஓய்வு விடுதிகள் அல்லது தங்கும் விடுதிகள் கட்டப்படலாம். அவையாவன :–

(i) ஏற்கனவே உள்ள சாலைகளின் பக்கமுள்ள நிலப்பகுதி அல்லது ஏற்கனவே உள்ள அங்கீகரிக்கப்பட்ட நிலையான கட்டமைப்புகளின் நிலப்பகுதிகளுக்கு மட்டுமே கட்டுமானம் அனுமதிக்கப்படும்;

(ii) நிபந்தனைக்குட்பட்டு தனியார் சொத்துக்களைச் சுற்றி தாவரங்களால் அமைந்த வேலிகள் மற்றும் தாவரங்கள் படர்ந்துள்ள முட்கம்பி வேலிகள் ஆகியவற்றை அமைப்பதற்கு அனுமதிக்கப்படலாம், மேலும் அத்தகைய வேலிகள் பொதுமக்கள் கடற்கரைக்குச் செல்வதை தடுக்கும் வகையில் அமைக்கக்கூடாது.

(iii) மணல் மேடுகளைச் சமன்படுத்தும் பணி மேற்கொள்ளப்படக்கூடாது;

(iv) கோல் கம்பங்கள், வலை கம்பங்கள் மற்றும் விளக்கு கம்பங்கள் கட்டுவதைத் தவிர, விளையாட்டு வசதிகளுக்கான நிரந்தர கட்டமைப்புகள் ஏதும் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது;

(v) கட்டுமானம் கட்டுவதனால் அப்பகுதியில் நிலத்தடி நீரின் சீரான ஓட்டத்தை மோசமான வகையில் பாதிக்காது என்ற, நிபந்தனைக்குட்பட்டு மாநில நிலத்தடி நீர் ஆணையத்திடம் இருந்து தடையின்மைச் சான்றிதழினை பெற்று அடித்தளத்தைக் கட்ட அனுமதிக்கலாம்;

(vi) மாநில நிலத்தடி நீர் ஆணையம், அத்தகைய தடையின்மைச் சான்றிதழினை வழங்குவதற்கு முன்னர் மத்திய அரசு வழங்கிய வழிகாட்டி குறிப்புகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்;

(vii) திட்டம் செயல்படும் பகுதியிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், திடக்கழிவுகள், உமிழ்வுகள் மற்றும் இரைச்சல் அளவுகள் போன்றவற்றின் தரம், மத்திய அல்லது மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியம் உட்பட, தகுதிவாய்ந்த அதிகாரமன்றங்களினால் மற்றும் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் (29/1986) கீழ் வகுக்கப்பட்ட தர நிலைகளுக்கு இணக்கமாக இருக்க வேண்டும்.

(viii) கழிவுநீர் மற்றும் திடக்கழிவுகளை சுத்திகரிக்கத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும், மேலும் சுத்திகரிக்கப்படாத கழிவுகள் மற்றும் திடக்கழிவுகள் நீர்நிலைகளிலோ அல்லது கடற்கரையிலோ வெளியேற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்; மேலும்



Verified RealEstate™

கடற்கரையில் யாதொரு வகையிலான கழிவுநீர் அல்லது திடக்கழிவுகளை வெளியேற்றுதல் கூடாது;

(ix) திட்டமானது வன நிலத்தை காடுகளற்ற நிலப்பகுதிகளாக மாற்றும் நோக்கங்களை கொண்டிருக்கும் நேர்வில், 1980 ஆம் ஆண்டு வனங்கள் (பாதுகாப்பு) சட்டத்தின் (69/1980), கீழ் தேவைப்படும் அனுமதி பெறப்பட்டு, திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய வகையிலான ஏனைய மத்திய மற்றும் மாநில சட்டங்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் மாநில அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் சுற்றுலா துறையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

**2. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III**

சுற்றுலாப் பயணிகள் அல்லது பார்வையாளர்கள் தங்குவதற்காக கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – III இல் வரையறுக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடற்கரை ஓய்வு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகளைக் கட்டுவது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைய வேண்டும். அவையாவன :–

(i) வேலி அமைப்பது கடற்கரைக்கு பொதுமக்கள் செல்வதற்கு எந்த வகையிலும் தடையாக இருக்கக்கூடாது என்னும் நிபந்தனைக்கு உட்பட்டு, தனியார் உடமைகளைச் சுற்றி தாவரங்களாலான வேலி மற்றும் தாவரங்களைக் கொண்ட முட்கம்பி வேலி அமைக்க அனுமதி அளிக்கலாம்.

(ii) மணல் மேடுகளைத் தட்டையாக்குதல் கூடாது;

(iii) கோல் கம்பங்கள், வலைக் கம்பங்கள் மற்றும் விளக்கு கம்பங்கள் ஆகியவற்றை அமைப்பதைத் தவிர, ஏனைய விளையாட்டு வசதிகளுக்கான நிரந்தர கட்டமைப்புகள் ஏதும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(iv) அந்த பகுதியின் நிலத்தடி நீரின் இயல்பான ஓட்டத்தை பாதிக்காது என மாநில நிலத்தடி நீர் ஆணையத்திடம் இருந்து தடையின்மைச் சான்றிதழினை பெற வேண்டும் என்னும் நிபந்தனைக்குட்பட்டு, அடித்தளம் அமைக்க அனுமதி அளிக்கலாம்.

(v) அத்தகைய தடையின்மைச் சான்றிதழை வழங்குவதற்கு முன், மாநில நிலத்தடி நீர் ஆணையமானது மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

(vi) யாதொரு கட்டுமானம் தடைசெய்யப்பட்ட பகுதியிலும் யாதொரு கட்டுமானமும் அனுமதிக்கப்பட மாட்டாது என்ற போதிலும், தள பரப்புக் குறியீட்டை கணக்கிடும் நோக்கங்களுக்காக கட்டுமானம்

Verified RealEstate™

தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் வரும் பகுதி உட்பட மொத்த மனையின் பரப்பளவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(vii) அனைத்துத் தளங்களிலும் உள்ள மொத்தப் பரப்பளவு, மனையின் பரப்பளவின் 33 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும், அதாவது, தள பரப்புக் குறியீடு 0.33–க்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும் திறந்தவெளி உரிய தாவர பரப்பை கொண்டிருக்க வேண்டும்;

(viii) கட்டுமானமானது சுற்றியுள்ள நிலப்பரப்பு மற்றும் உள்ளூர் கட்டடக்கலை அமைப்பு முறையை ஒத்திருக்க வேண்டும்:

(ix) மேற்கூரையின் மிக உயர்ந்த இடம் வரையிலான கட்டுமானத்தின் ஒட்டுமொத்த உயரம், 9 மீட்டருக்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும், கட்டுமானமானது இரண்டு தளங்களுக்கு மேல் இருக்கக்கூடாது (தரை தளம் மற்றும் ஒரு மேல் தளம்):

(x) உயர் அலைக் கோட்டிலிருந்து 200 மீட்டருக்குள் நிலத்தடி நீரை எடுக்கக் கூடாது; மற்றும் 200 முதல் 500 மீட்டர் மண்டலத்திற்குள் மத்திய அல்லது மாநில நிலத்தடி நீர் வாரியத்தின் ஒப்புதலுடன் மட்டுமே நீரை எடுக்க வேண்டும்;

(xi) உயர் அலைக் கோட்டிலிருந்து 500 மீட்டருக்குள் கட்டடத்திற்கான அடித்தளம் அமைத்தல் அல்லது நீச்சல் குளம் அமைத்தல் தவிர மணல் எடுத்தல், மணல் பரப்புகளை சமன் செய்தல் அல்லது தோண்டுதல் ஆகியவை அனுமதிக்கப்படாது:

(xii) திட்டப் பணி நடைபெறும் பகுதியிலிருந்து வரும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் தரம், திடக்கழிவுகள், வெளியேற்றங்கள் மற்றும் ஒலி அளவுகள் மற்றும் அது போன்றவை, மத்திய அல்லது மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியம் உள்ளிட்ட தகுதிவாய்ந்த அதிகார மன்றங்களாலும் மற்றும் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழும் (29/1986) வகுக்கப்பட்ட தரநிலைகளுக்கு இணக்கமாக இருக்க வேண்டும்;

(xiii) கழிவுகள் மற்றும் திடக்கழிவுகளை சுத்திகரிப்பதற்கான தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மேலும், சுத்திகரிக்கப்படாத கழிவுகள் மற்றும் திடக்கழிவுகள் நீர்நிலைகளிலோ அல்லது கடற்கரையிலோ வெளியேற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்; மேலும் கடற்கரையில் கழிவுநீர் அல்லது திடக்கழிவுகளை வெளியேற்றக்கூடாது;

(xiv) கடற்கரைக்கு பொதுமக்கள் செல்வதை அனுமதிப்பதற்காக, ஏதேனும் இரண்டு தங்கும் விடுதிகள் அல்லது கடற்கரை ஓய்வு விடுதிகளுக்கு இடையே குறைந்தபட்சம் 20 மீட்டர் அகல இடைவெளி விடப்பட வேண்டும்; யாதொரு நேர்விலும் இடைவெளிகள் 500 மீட்டருக்கும் குறைவாக இருக்கக்கூடாது; மற்றும்

Verified RealEstate TM

(xv) குறிப்பிட்ட திட்டப் பணியில் வனப்பகுதியை வனம் அல்லாத நோக்கங்களுக்காக மாற்ற வேண்டியிருப்பின், 1980 ஆம் ஆண்டு வனச் (பாதுகாப்பு) சட்டத்தில் (69/1980) குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியைப் பெற வேண்டும். மேலும் மத்திய மற்றும் மாநில அரசு சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். அத்துடன், மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியினுடைய சுற்றுலா துறையின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

குறிப்பு: சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் (கடல்சார் பூங்காக்கள், சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள், மீன்களின் இனப்பெருக்கம் மற்றும் முட்டையிடும் பகுதிகள், வனவிலங்குகளின் வாழ்விடங்கள் மற்றும் மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியால் அரசால் அறிவிக்கப்படும் ஏனைய பகுதிகள்) கடற்கரை உல்லாச விடுதிகள் அல்லது தங்கும் விடுதிகள் கட்ட அனுமதிக்கப்பட மாட்டாது.

Verified RealEstate™

## பிற்சேர்க்கை – IV

**கடலோர மண்டல மேலாண்மை திட்டங்களை வகுப்பதற்கான வழிமுறைகள்**

**1. உயரலைக் கோடு மற்றும் தாழ்வலைக் கோட்டின் வரையறை:**

நாட்டின் முழுக் கடற்கரைக்கும் தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்தால் நிர்ணயிக்கப்பட்ட உயரலைக் கோடு (HTL) மற்றும் தாழ்வலைக் கோடு (LTL) ஆகியவை கடலோர மாநிலங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கும் வழங்கப் பெற்றுள்ளன. இந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கும் அனைத்து நோக்கங்களுக்கும் அத்தகைய உயரலைக் கோடு (HTL) மற்றும் தாழ்வலைக் கோட்டின் எல்லை நிர்ணயம் மட்டுமே பொருந்தும்.

**2. அபாயக் கோடு:**

குறிப்பிட்ட காலத்தில் ஏற்படுகிற நீர்மட்ட ஏற்ற இறக்கங்கள், கடல் மட்ட உயர்வு மற்றும் கரையோர மாற்றங்கள் (மண்ணரிப்பு அல்லது நிலச்சேர்மானம்) ஆகியவற்றின் காரணமாக நிலப்பரப்பில் ஏற்பட்ட வெள்ளத்தின் அளவைக் கணக்கில் கொண்டு இந்திய நில அளவைத் துறையால் (SOI) 'அபாயக் கோடு' வரையறுக்கப்பட்டுள்ளது. இந்திய நில அளவைத் துறையால் வரையப்பட்டுள்ள அபாயக் கோடு தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையம் வாயிலாக கடலோர மாநிலங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுடன் பகிரப்படுகிறது. அபாயக் கோடானது, கடலோர பகுதிகளுக்கான தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளின் திட்டமிடல் உட்பட பேரிடர் மேலாண்மைத் திட்டத்திற்கான கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். கடலோர சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கும், நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கும், கடலோர மண்டல மேலாண்மை திட்டங்களை வகுக்கும்போது, காலநிலை மாற்றம் மற்றும் கரையோர மாற்றங்களின் தாக்கங்களைக் கருத்தில் கொண்டு அபாயக் கோட்டிற்கும், உயரலை கோட்டிற்கும் இடைப்பட்ட பகுதிக்கான நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல், அமைய வேண்டும்.

**3. கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்களைத் தயாரித்தல்:**

(i) 1:25,000 என்ற வீதத்திலமைந்த அடிப்படை வரைபடங்கள், இந்திய நில அளவைத் துறையிடமிருந்து பெறப்பட வேண்டும். மேலும், 1:25,000 வரைபடங்கள் கிடைக்காதபோது, அடிப்படை வரைபடத்தைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக 1:50,000 வரைபடங்கள் 1:25,000 ஆக பெரிதாக்கப்பட வேண்டும். இந்த வரைபடங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள நிலையான விவர குறியீடுகளைக் கொண்டிருக்கும்:–

அலகு : 7.5 நிமிடங்கள் X 7.5 நிமிடங்கள்

இலக்கமிடுதல் : இந்திய நில அளவைத் துறையின் தாள் இலக்கமிடும் முறை

கிடைமட்ட தரவு : எவரெஸ்ட் அல்லது WGS 84

செங்குத்து தரவு : சராசரி கடல் மட்டம் (எம்எஸ்எல்)

Verified RealEstate™

இடவமைப்பு: அண்மைக்கால செயற்கைக்கோள் படங்கள் அல்லது வான்வழி புகைப்படங்களைப் பயன்படுத்தி இந்திய நில அளவைத் துறையின் வரைபடங்களில் உள்ள இடவமைப்பு நாளது வரையாக்கப்படும்.

(ii) 1:25,000 அளவிலான கடலோர மண்டல மேலாண்மை (CZM) வரைபடங்கள் தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்தால் எல்லை வரையறை செய்யப்பட்ட உயரலை மற்றும் தாழ்வலைக் கோடுகளைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் 14.03.2014 ஆம் நாளிட்ட அலுவலக ஆணை எண்.J–17011/8/92–IA–III–இல் குறிப்பிடப்பட்டவாறு அடையாளங்–காணப்பட்ட முகமைகள் வாயிலாக தயாரிக்கப்பட வேண்டும்.

(iii) பல்வேறு கடலோர ஒழுங்குமுறை மண்டல வகைகளுக்கும் பொருந்துகிறவாறாக உயரலைக் கோட்டிலிருந்து முறையே 20 மீட்டர்கள், 50 மீட்டர்கள், 200 மீட்டர்கள் மற்றும் 500 மீட்டர்கள் தொலைவில் உள்ள பல்வேறு ஒழுங்குமுறைக் கோடுகள் மற்றும் அபாயக் கோடுகளுக்கான எல்லை வரையறை செய்யப்பட்டு கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

(iv) ஆட்சியெல்லைக்குட்பட்ட நிலப்பரப்பினுள் அமைந்த அலை தாக்கம் உள்ள நீர்நிலைகளின் கரையோரங்களில் நேர்வுக்கேற்ப உயரலை, தாழ்வலை மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டல எல்லைகள் ஆகியவை கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்களில் வரையறுக்கப்பட வேண்டும்.

(v) கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின்படி வெவ்வேறு கடலோர மண்டலங்களின் வகைப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், நிலையான தேசிய அல்லது பன்னாட்டு வண்ணக் குறியீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

**4. உள்ளூர் அளவிலான கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்கள்:**

(i) உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் கடலோர மண்டல மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதற்கு உள்ளூர் அளவிலான கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்கள் வகை செய்யும்.

(ii) வருவாய் அலுவலர்களிடம் உள்ள 1:3960 அல்லது அதற்கு சற்றொப்ப அருகிலுள்ள வீதங்களில் அமைந்த நில அளவை படங்கள் (கிராம) அடிப்படை வரைபடங்களாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

(iii) உயரலைக்கோடு, தாழ்வலைக் கோடு மற்றும் ஏனைய கடலோர ஒழுங்குமுறை மண்டல எல்லைக் கோடுகள் ஆகியவை நில அளவைப்படங்களில் குறிக்கப்பட வேண்டும். மேலும், வகைப்பாடுகள் உள்ளூர் அளவிலான கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.



Verified RealEstate™

5. கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதிகளின் வகைப்பாடு:

(i) கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்கள், அப்பகுதியின் நில பயன்பாட்டுத் திட்டத்தைத் தெளிவாக வரையறுத்து, கடலோர மாநிலம் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்தால் வழங்கப்பெற்ற வரையறையின் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் (ESAக்கள்) அல்லது கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IA பகுதிகள் வரையறுக்கப்பட வேண்டும். அத்தகைய அனைத்து சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளும் வண்ணக் குறியீடுகளுடன் முறையாக வரையறுக்கப்பட வேண்டும்.

(ii) 1000 சதுர மீட்டருக்கும் அதிகமான அலையாத்தி பகுதிகளில் உள்ள இடைத்தாங்கு மண்டலத்தை அலையாத்தி பகுதியிலிருந்து வேறுபடுத்தும் விதமாக வேறு வண்ணத்தில் குறிக்கப்பட வேண்டும். இடைத்தாங்கு மண்டலம் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I பகுதி என்றும் வகைப்படுத்தப்பட வேண்டும்.

(iii) கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதிகளில், மீனவ கிராமங்கள், மீனவ சமுதாயத்தினரின் பொதுவான உடைமைகள், மீன்பிடி தூண்டில்கள், பனிக்கட்டி ஆலைகள், மீன் உலர்த்தும் தளங்கள் அல்லது மீன்பிடி மற்றும் உள்ளூர் சமூகங்களின் உள்கட்டமைப்பு வசதிகளான மருந்தகங்கள், சாலைகள், பள்ளிகள் போன்றவை நில அளவை படங்களில் குறிக்கப்பட வேண்டும். மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் விரிவாக்கம் மற்றும் ஏனைய தேவைகள், துப்புரவு, பாதுகாப்பு மற்றும் பேரிடர் தயார்நிலை உள்ளிட்ட அடிப்படை சேவைகளை வழங்குதல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு கடலோர மீனவ சமுதாயத்தினரின் நீண்ட கால வீட்டுவசதி தேவைகளுக்கான விரிவான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

(iv) கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – IV இன் நீர்நிலைகள் வரையறுக்கப்பட்டு, அவை, கடல், உப்பங்கழி, கழிமுகம், சிற்றோடை, விரிகுடா மற்றும் முகத்துவாரம் என தெளிவாக வகைப்படுத்தி குறிக்கப்பட வேண்டும். மேலும், அத்தகைய வகைப்பாட்டிற்கு கடற்படை நீராய்வியல் அலுவலகத்தால் பயன்படுத்தப்படும் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

(v) நீர்நிலைகளில் உள்ள மீன்பிடி மண்டலங்கள் மற்றும் மீன் இனப்பெருக்கப் பகுதிகள் தெளிவாக அமையுமாறு குறிக்கப்பட வேண்டும்.

(vi) மிக இடருக்குட்பட்ட கடல் மற்றும் கடற்கரை பகுதிகளில், நில பயன்பாட்டு வரைபடங்கள் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I, II, III, IV ஆகியவற்றை தெளிவாக வரையறுக்கும் வகையில் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தின் மேல் பொருத்திக் காட்டப்பட வேண்டும்.

(vii) கடலை நோக்கிய பகுதிகளில் தற்போதுள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.



Verified RealEstate™

(viii) புயல்கள், சூறாவளிகள், சுனாமி போன்றவற்றின் போது மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, புயல் முகாம்கள், மழை தங்குமிடங்கள், உலங்கூர்தி தளங்கள் (ஹெலிபேடுகள்) மற்றும் சாலைத் தொடரமைப்பு உள்ளிட்ட ஏனைய உள்கட்டமைப்புகள் போன்றவை கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(ix) சுற்றுச்சூழல் தரநிலைகள், விதிகள் மற்றும் சட்டங்களின்படி திட மற்றும் திரவக் கழிவுகள் தொடர்பான இடர்பாடுகளை முறையாகக் கையாளுவதற்கும், அகற்றுவதற்கும் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, யாதொரு சூழ்நிலையிலும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கடலில் கலக்காமல் இருக்கும் நேர்வில், கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கட்டடங்கள் கட்டுதல் அல்லது ஏனைய செயல்பாடுகளுக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

**6. கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் குறித்து பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு:**

(i) 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்படி, தயாரிக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை விளம்பரப்படுத்தி, பொதுமக்களின் பரிந்துரைகள் மற்றும் மறுப்புரைகள் பெறப்பட வேண்டும். கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் வரைவு குறித்து பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு தொடர்புடைய கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தால் மாவட்ட அளவில் நடத்தப்பட வேண்டும்.

(ii) பெறப்பட்ட பரிந்துரைகள் மற்றும் மறுப்புரைகளின் அடிப்படையில் கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(iii) ஏற்பளிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டமானது சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் இணையதளத்திலும் தொடர்புடைய மாநிலம் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியின் இணையதளத்திலும் வெளியிடப்பட வேண்டும். மேலும் அதன் நகல் ஊராட்சி அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**7. கடலோர மண்டல மேலாண்மை திட்டங்களின் திருத்தம்:**

(i) ஐயம் ஏற்படும் போதெல்லாம், தொடர்புடைய மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியின் கடலோர மண்டல மேலாண்மை ஆணையமானது தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்தை அணுக வேண்டும். அந்த மையமானது அண்மைக் கால செயற்கைக்கோள் படங்கள் மற்றும் நேரடி களச்சரிப்பார்ப்பின் அடிப்படையில் கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தைச் சரிபார்க்கும்.

(ii) தேவைப்படுமாயின், திருத்தப்பட்ட வரைபடமானது சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடம் பரிசீலனைக்கு அளிக்கப்பட வேண்டும்.



Verified RealEstate™

<u>பிற்சேர்க்கை – V</u>

**செயல் திட்டம் குறித்த விவரங்கள்**

**1. செயல் திட்ட விவரங்கள்**

A. செயல் திட்டத்தின் பெயர்

B. நில அளவை எண்/கிராமம்/ ஒருங்கிணைப்புகள்

C. மாவட்டம்

D. மாநிலம்

E. பின்வருவனவற்றில் எது குறித்தான கருத்துரு (தொடர்புடைய துறையைத் தேர்ந்தெடுக்கவும்)

(i) கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் கீழ் புதிய அனுமதி

(ii) ஏற்கனவே வழங்கப்பட்ட ஒரு கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதியில் திருத்தம்

(iii) ஏற்கனவே வழங்கப்பட்ட ஒரு கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதிக்கான காலவரம்பினை நீட்டித்தல்

F. விண்ணப்பதாரரின் பெயர்

G. விண்ணப்பதாரரின் முகவரி

H. தொடர்பு விவரங்கள் (தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி)

I. செயல் திட்டத்தின் செலவு (ரூபாய் கோடிகளில்)

**2. செயல் திட்டத்தின் நன்மைகள்/பயன்கள்**

A) திட்டத்தின் நன்மைகள்/பயன்கள் பற்றிய விவரங்கள்

B) வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் (ஆம்/ இல்லை)

ஆம் எனில்

(i) தேவைப்படும் மொத்த மனித வளம்
(ii) நிரந்தர வேலைவாய்ப்பு (எண்ணிக்கையில்)
(iii) தற்காலிக வேலைவாய்ப்பு (எண்ணிக்கையில்)
(iv) தற்காலிக வேலைவாய்ப்பு (எண்ணிக்கையில்) கட்டுமானத்தின்போது
(v) தற்காலிக வேலைவாய்ப்பு ( எண்ணிக்கையில்) செயல்பாட்டின்போது

**3. பரிசீலனையில் உள்ள செயல்திட்டம் குறித்த விவரிப்பு (செயல்திட்டத்தின் வகையைத் தேர்ந்தெடுக்கவும்)**

**A) தங்கி மகிழ்விடம் /கட்டடங்கள் / குடியிருப்பு வசதிகள்**

(i) மொத்த பரப்பு/கட்டப்பட்ட பகுதி (ச. மீட்டரில்)
(ii) கட்டமைப்பின் உயரம்
(iii) அனுமதிக்கப்பட்ட தரைத்தள இடக்குறியீட்டெண் விகிதம்
(iv) சம்பந்தப்பட்ட நகர திட்டமிடல் அதிகார அமைப்பு/பஞ்சாயத்தின் பெயர் போன்றவை
(v) கார் நிறுத்துமிடத்தின் ஏற்பாடு பற்றிய விவரங்கள்

Verified RealEstate™

**B) கடலோர சாலைகள்/ நெடுங்கழி கொண்டு உயத்திக்கட்டப்பட்ட சாலைகள்**

(i) மறுசீரமைக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு
(ii) மறுசீரமைப்பிற்காக மதிப்பிடப்பட்ட அகழ் மண் /இடத்தின் அளவு
(iii) போக்குவரத்து வாகனங்கள் செல்லக்கூடிய வகையிலமைந்த தாங்கு திறன்
(iv) சாலையின் பரிமாணங்கள்

**C) அனல் மின்சார கொள்கலனிலிருந்து இணைக்கப்பட்ட குழாய்கள்**

(i) குழாயின் மொத்த நீளம்
(ii) கடலோர ஒழுங்குமுறை மண்டலப்பகுதி வழியாக செல்கிற குழாயின் நீளம்
(iii) அகழ்வாராய்ச்சியின் ஆழம்
(iv) அகழ்வாராய்ச்சியின் அகலம்
(v) கடற்கரையிலிருந்து ஆழ்கடல் வரையிலான குழாயின் நீளம்
(vi) கடல்நீரின் மேற்பரப்பிலிருந்து வெளியேறும் பகுதியின் ஆழம்
(vii) அப்புறப்படுத்தும் இடத்தில் சுற்றுப்புறத்திற்கு வெளியே பரவும் கழிவு நீரின் வெப்பநிலை

D) **சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை குழாய்கள் வழியாக கடல்சார் இடத்திலிருந்து அகற்றுதல்**

(i) உட்செலுத்துமிடம் / வெளியேற்றுமிடம்
(ii) வெளியேற்றுமிடத்தின் ஆழம்
(iii) குழாயின் நீளம்
(iv) கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதியை கடந்து செல்கையில் குழாயின் நீளம்
(v) அகழ்வாராய்ச்சியின் ஆழம்
(vi) அகழ்வாராய்ச்சியின் அகலம்
(vii) கடற்கரை / ஆழ்கடல்/கடற்கழி வரையிலான குழாயின் நீளம்
(viii) கடல்நீரின் மேற்பரப்பிலிருந்து வெளியேறும் இடத்தின் ஆழம்
(ix) அகற்றும் இடத்தில் நீரின் ஆழம்
(x) கழிவுநீரில் உயிர்வேதி ஆக்ஸிஜன் தேவைப்படுகிற அளவு, வேதியிய ஆக்ஸிஜன் தேவை அளவு, தொங்கல் துகள்கள் அளவு , எண்ணெய் மற்றும் மசகெண்ணெய், கழிவுநீரில் கன உலோகங்களின் அளவுகள்.

**E. பொருட்கள் / வேதிப்பொருட்களை சேமித்து வைப்பதற்கான வசதியமைப்பு**

(i) வேதிப்பொருளின் பெயர்
(ii) வேதிப்பொருளின் இறுதி பயன்பாடு
(iii) சேமித்து வைப்பதற்கான தொட்டிகளின் எண்ணிக்கை
(iv) தொட்டிகளின் கொள்ளளவு



Verified RealEstate ™

F. கடற்கரைக்கு அப்பால்/ கடலில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு

(i) ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு
(ii) கடல்படுகையின் ஆழம்
(iii) எரிவாயு/எண்ணெய்த்துரவுகள்/ ஏனைய துரவுகளின் எண்ணிக்கை
(iv) எரிவாயுத்துரவு /கச்சா எண்ணெய்த்துரவு/ ஏனைய துரவுகளுக்கான மேடைகளின் எண்ணிக்கை
(v) எரிவாயு/ கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் குறித்த விவரங்கள்

**G. உப்புநீக்கும் ஆலை**

(i) உப்புத்தன்மையகற்று/உவர்தன்மையகற்று திறன்
(ii) மொத்த உவர்நீர் / உப்புநீர் உற்பத்தி
(iii) அப்புறப்படுத்தும் இடத்தில் சுற்றுப்புறத்திற்கு வெளியே பரவக்கூடிய கழிவு நீரின் வெப்பநிலை
(iv) சுற்றுப்புற உவர்தன்மை / உப்புத்தன்மை
(v) அகற்றுமிடம்

**H. அணுசக்தித் தனிமங்களுக்கான சுரங்கப் பணிகள்**

(i) சுரங்க பணியின் திறன்
(ii) பிரித்தெடுக்கப்பட வேண்டிய கனிமத்தின் வகை
(iii) கனிமத்தின் இறுதிப் பயன்பாடு
(iv) சுரங்க குத்தகை / ஆராய்ச்சி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சுரங்கத் திட்ட விவரங்கள் மீதான அரசாணை
(v) சுரங்க குத்தகை பகுதியின் பரப்பு

**I. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

(i) கொள்திறன்
(ii) கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு
(iii) மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம்/மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியம்/ ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வகுக்கப்பட்ட கழிவுநீர் அளவுருக்களுக்கு இணக்கமாக அமைந்திருத்தல்
(iv) கடல் நீர்/கடற்கழியில் கழிவுநீர்க்கலத்தல் காணப்படுகிறதா? ஆம் எனில்,
- கரையிலிருந்து/அலை ஆற்றின் கரையிலிருந்து கடல் வெளியேற்றப் பகுதியின் தொலைவு
- கடல் நீர் / நதி நீர் மேற்பரப்பில் இருந்து வெளியேறும் பகுதியின் ஆழம்
- கடலின் அடிப்பகுதி /ஆற்றுப்படுகையில் இருந்து வெளியேறும் பகுதியின் ஆழம்

**J. கலங்கரை விளக்கம்**

(i) அடித்தளம்/நடைமேடையின் மொத்த நிலப்பரப்பு
(ii) கட்டமைப்பின் உயரம்

Verified RealEstate ™

**K. காற்றாலைகள்**

(i) மின் உற்பத்தி திறன் (MW)

(ii) காற்றாலையின் உயரம்

(iii) காற்றாலையின் விட்டம்

(iv) சுழல் தகட்டின் நீளம்

(v) சுழற்சியின் வேகம்

(vi) மின்கடத்து கம்பிகள் (மேலியல் / வான்வழி மின்தடம்/ நிலத்தடி மின்தடம்)

**L. ஏனையவை**

(i) சிறப்பியல்புகளுடன் குறிப்பிடவும்

(ii) தொடர்புடைய ஆவணங்களைப் பதிவேற்றம் செய்யவும் (PDF வடிவில் மட்டும் பதிவேற்றம் செய்யவும்)

**4. கடலோர ஒழுங்குமுறை மண்டல வகைப்பாட்டின் படி அமைவிடம்** (செயல் திட்டத்திற்கான மனை வெவ்வேறு / பல்வேறு கடலோர ஒழுங்குமுறை மண்டல வகைகளில் அமைந்திருந்தால், இதனை விரிவாக விவரிக்கலாம்)

**5. அனுமதிக்கப்பட்ட/ஒழுங்குமுறைபடுத்தப்பட்ட ஒரு செயல் திட்டத்தின் கீழ் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் பகுதி**

**6. செயல்திட்ட மதிப்பீட்டிற்கான கட்டாயமான செயல் பகுதிகள்**

**A. கடலோர ஒழுங்குமுறை மண்டல வரைபடம் 1:4000 அளவில் உயரளவு அலைக்கோடு, தாழ்வலைக்கோடு எல்லை வரையறுத்தல் மற்றும் உயரலைக் கோட்டிலிருந்து அருகிலுள்ள திட்ட எல்லையின் தூரம் (மீட்டரில்) குறிப்பிடப்பட வேண்டும்.**

(i) வரைபடத்தைப் பதிவேற்றம் செய்யவும் (kml file – Keyhole Markup Language file)

**B. அறிவிக்கையிடப்பட்ட சுற்றுச்சூழல் மனை மதிப்பீடுகள் உள்ளிட்ட செயல்திட்ட வகைப்பாடுகளுடன் 1 : 4000 அளவு கொண்ட வடிவமைப்பின் மீது மேற்பொருத்தப்பட்ட செயல்திட்ட வடிவமைப்பு**

(i) வரைபடத்தைப் பதிவேற்றம் செய்யவும் (kml file – Keyhole Markup Language file)

**C. செயல்திட்ட இடத்தைச் சுற்றி 7 கி.மீ. சுற்றளவில் உள்ள இடங்களை உள்ளடக்கிய 1 : 25000 அளவிலான கரையோர ஒழுங்குமுறை மண்டல வரைபடம்**

வரைபடத்தைப் பதிவேற்றம் செய்யவும் (kml file – Keyhole Markup Language file)

**7. திட்டத்தின் அமைவிடம்** (வகையைத் தேர்ந்தெடுக்கவும்)

(i) கடலரிப்பு இல்லாத கடற்கரை

(ii) குறைந்தளவில் மற்றும் மிதமாக கடலரிப்பு காணப்படுகிற கடற்கரை

(iii) அதிகளவு கடலரிப்பைக் கொண்ட கடற்கரை



Verified RealEstate ™

**8. சம்பந்தப்பட்ட காடு/அலையாத்திக்காடுகளின் விவரங்கள் (ஆம்/இல்லை)**
**ஆம் எனில்**

(i) திசை திருப்பப்பட்ட கடலோரப் பகுதியின் விவரம்
(ii) வன அனுமதி அளிக்கப்பட வேண்டும் (ஆவணத்தை பதிவேற்றம் செய்யவும்)
(iii) திட்டத்தின் கீழ் வெட்டப்பட வேண்டிய மரங்களின் எண்ணிக்கை
(iv) அதற்கென ஈடுசெய்கிற வகையில் காடு வளர்ப்புத் திட்டம் அளிக்கப் பட வேண்டும் (ஆவணத்தை பதிவேற்றம் செய்யவும்)

**9. சுற்றுச்சூழல் தள மதிப்பீடு / கடலோர பூங்கா / வனஉயிரினச் சரணாலயம் ஆகியவற்றிடமிருந்து கருத்துரைக்கப்பட்ட திட்ட அமைவிடத்தின் தொலைவு**

திட்ட தளத்தில் இருந்து 10 கிலோ மீட்டர் சுற்றளவில் (ஆம்/இல்லை)
ஆம் எனில்

- தேசிய வனஉயிரின வாரியத்திடமிருந்து பெறப்பட்ட அனுமதிக்கான ஆவணத்தை அளிக்க வேண்டும். (ஆவணத்தை பதிவேற்றம் செய்யவும்)

**10. தடையில்லாச் சான்றிதழ் அல்லது நிறுவுவதற்கான/ ஏற்படுத்துவதற்கான ஒப்புதல் மாநில/ மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதியின் மாசுக்கட்டுப்பாடு வாரியங்களில் இருந்து பெறப்பட்டதா(ஆம்/இல்லை)**
**ஆம் எனில்**

(i) தடையில்லாச் சான்றிதழின் நகல் வழங்கப்பட வேண்டும் (ஆவணத்தை பதிவேற்றம் செய்யவும்)
(ii) விதிக்கப்பட்ட நிபந்தனைகள் குறிப்பிடப்பட வேண்டும் (ஆவணத்தை பதிவேற்றம் செய்யவும்)

**11. சுற்றுச்சூழல் பாதிப்பு / தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் (தொடர்புடைய இடங்கள் நிரப்பப்பட வேண்டும்)**

**A) நிலப்பரப்பு ஆய்வுகள்**

(i) சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு (நிலப்பரப்பு) ஆய்வுகளின் சுருக்கம்.
(ii) சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டில் செய்யப்பட்ட பரிந்துரைகளைப் பதிவேற்றம் செய்யவும்.
(iii) ஆய்வுக் காலம் பற்றி தெரிவிக்கப்படவேண்டும்.

**B) கடலோர ஆய்வுகள்**

(i) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (நிலப்பரப்பு) ஆய்வுகளின் சுருக்கம்.
(ii) சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டில் செய்யப்பட்ட பரிந்துரைகளைப் பதிவேற்றம் செய்யவும்.
(iii) ஆய்வு காலம் பற்றி தெரிவிக்கப்படவேண்டும்.

Verified RealEstate ™

12. பேரிடர் மேலாண்மை திட்டம்/ தேசிய எதிர்பாரா எண்ணெய் கசிவு பேரிடர் திட்டம் (பொருந்துமெனில் மட்டும்)

13. திரவ வடிவிலான கழிவுகளை வெளியேற்றுவதற்கான திட்டம்

(i) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறன்.
(ii) உற்பத்தியாகிற கழிவுநீரின் அளவு
(iii) சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் அளவு
(iv) கையாளும் விதம் மற்றும் அகற்றும் முறை

14. திடக்கழிவுகளை வெளியேற்றுவதற்கான திட்டம்

(i) திடக்கழிவின் வகை.
(ii) உற்பத்தியாகிற திடக்கழிவின் அளவு
(iii) அகற்றும் முறை
(iv) தொடர்புடைய போக்குவரத்து முறைகள்

15. நாளொன்றிற்கு தேவைப்படுகிற தண்ணீரின் அளவு (கிலோ லிட்டரில்) (KLD)

(i) தேவைப்படும் தண்ணீரின் அளவு
(ii) நீராதாரங்கள்
(iii) நிலத்தடி நீராக இருந்தால் (மத்திய நிலத்தடி நீர் ஆணையம் அல்லது ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் ஒப்புதல் நகலை பதிவேற்றம் செய்யவும்)
(iv) ஏனைய நீராதாரமாக இருந்தால் (உரிய அதிகாரியிடமிருந்து பெற்ற அனுமதியின் நகலை பதிவேற்றவும்)
(v) தொடர்பான போக்குவரத்து முறைகள்
(vi) நீர் வழங்கல் செயல்திட்டம் (ஆவணத்தை பதிவேற்றம் செய்யவும்)

16. நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி பற்றிய விவரங்கள் (ஏதேனும் இருந்தால்)

(பல்வேறு உள்ளீடுகள் அனுமதிக்கப்படுகின்றன)

| நீரின் வகை/ ஆதாரம் | உற்பத்தியாகிற கழிவு நீரின் அளவு (நாளொன்றிற்கு கிலோ லிட்டரில்) | சுத்திகரிப்புத்திறன் (நாளொன்றிற்கு கிலோ லிட்டரில்) | சுத்திகரிக்கும் முறை | அகற்றும் முறை | வெளியேற்றப் பட்ட நீரின் அளவு (நாளொன்றிற்கு கிலோ லிட்டரில்) | மறுசுழற்சி / மறுபயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் சுத்திகரிப்பட்ட நீரின் அளவு (நாளொன்றிற்கு கிலோ லிட்டரில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

Verified RealEstate ™

**17. மழைநீர் சேகரிப்பு விவரங்கள்**

(i) சேமிப்பு தொட்டிகளின் எண்ணிக்கை
(ii) தொட்டிகளின் மொத்த கொள்ளளவு
(iii) நீர் செறிவூட்டலுக்கான குழிகளின் (Recharge pits) எண்ணிக்கை
(iv) குழிகளின் கொள்ளளவு

**18. தேவையான மின்ஆற்றல்/மின்சக்தி மற்றும்/ மின்சக்திக்கான ஆதாரங்கள்**

(i) தேவைப்படும் மொத்த மின் ஆற்றல்/ மின்சக்தியின் அளவு(kwh)
(ii) மின் ஆதாரம்
(iii) ஒப்பந்தத்தின் நகலை பதிவேற்றம் செய்யவும் (pdf வடிவில் மட்டும் பதிவேற்றம் செய்யவும்)
(iv) காத்திருப்பு/ தயார் நிலை ஏற்பாடு குறித்த விவரங்கள்(விளக்கமாக)

**19. மின்ஆற்றல் அல்லது எரிசக்தி செயல்திறன்/மின் சேமிப்பு நடவடிக்கைகள்**

(i) மின்ஆற்றல் / எரிசக்தி ஆதாரம் வகை
(ii) மின்சேமிப்பு/ எரிசக்தி சேமிப்பு விவரங்கள்

**20. மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரை**

(i) கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரைகளின் நகலை பதிவேற்றம் செய்யவும். (pdf வடிவில் மட்டும் பதிவேற்றம் செய்யவும்)
(ii) விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணக்கமான நிலை

**21. 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிவிக்கை இந்தக் கருத்துருவிற்குப் பொருந்துகிறதா?**

**ஆம் எனில்,**

(i) அதன் வகை
(ii) முன்மொழியப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதியின் தற்போதைய நிலை(பொருந்துமெனில்)

**22. மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு, நீர், காற்று, அபாயகரமான கழிவுகள், சூழலியல் கூறுகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஆனால் அவை வரையறுக்கப்படாத சமூக மற்றும் சுற்றுச்சூழல் விவகாரங்கள் மற்றும் அவற்றை தணிப்பதற்கான/ மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன (சுருக்கமான விவரங்கள் வழங்கப்பட வேண்டும்)**

Verified RealEstate ™

23. செயல் திட்டத்திற்கு எதிராக ஏதேனும் நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதா மற்றும்/அல்லது செயல் திட்டத்தை உருவாக்குவதற்கு கருத்துரைக்கப்பட்ட நிலம் உள்ளதா என்பது தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் விவரங்கள் (ஆம்/இல்லை)

**ஆம் எனில், நிலுவையில் உள்ள அல்லது தீர்வு செய்யப்பட்ட வழக்குகள்**

(தொடர்புடையதைத் தேர்ந்தெடுக்கவும்)

(i) நீதிமன்றத்தின் பெயர் (உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், தேசிய பசுமைத் தீர்ப்பாயம்)
(ii) வழக்கு எண்
(iii) வழக்கு விவரங்கள்
(iv) கருத்துரைக்கப்பட்ட செயல் திட்டத்துடன் தொடர்புடைய நீதிமன்ற உத்தரவுகள்/வழிமுறைகள், ஏதேனுமிருப்பின்

**24. கூடுதல் தகவல் ஏதேனுமிருப்பின்,**

**உறுதிமொழி :** மேலே அளிக்கப்பட்ட விவரங்கள் எனக்கு தெரிந்த வரையிலும், நான் நம்புகிற வகையிலும் உண்மையானதெனவும், 2011 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதி அறிவிக்கையின் விதித்துறைகளுக்கு முரணான எதுவும் மறைக்கப்படவில்லை எனவும் சான்றளிக்கப்படுகிறது.

//தமிழாக்கம்//

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்
(மொழிபெயர்ப்பு) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

Verified RealEstate™

Verified RealEstate ™

Verified RealEstate™